விலை ரூபா: 5.00 பக்கங்கள்:-எட்டு

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
# VALAMPURI

சங்கு-03 வள்ளுவர் ஆண்டு 2033 ஆனி 30 ஞாயிற்றுக்கிழமை (14.07.2002) தொலைபேசி 3378 ஒலி 207




### பாதுகாப்பு இரகசியங்களை; புலிகளுக்கு வழங்கி

# என்னைக் கொல்வதற்கு சில அமைச்சர்கள் முயற்சி



## ஜனாதிபதி சந்திரிகா குற்றச்சாட்டு

(நமது நிருபர்)

**எனது பாதுகாப்பு, மற்றும் பிரயாண இரகசியங்களை விடுதலைப்புலிகளுக்கு தெரியப்படுத்தி என்னைக் கொல்வதற்கு ஐ.தே.முன்னணி அரசின் இரண்டு அமைச்சர்கள் முயற்சி செய்துவருகின்றனர். இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா குற்றம் சாட்டியுள்ளார்.**

ஆடம்பர வாகனங்கள் தொடர்பாக ஐக்கிய தேசிய முன்னணியின் அமைச்சர்கள் தெரிவித்த தகவல்களுக்குப் பதிலளிக்கும் வகையில் ஜனாதிபதி விடுத்த அறிக்கை ஒன்றிலேயே மேற்கண்டவாறு குற்றஞ் சாட்டியுள்ளார்.

அவ்வறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

அமைச்சர்கள் ரவிகருணாநாயக்காவும், சொக்ஸியும் ஆடம்பர வாகனங்கள் குறித்தும் முன்னுக்குப் பின் முரணான தகவல்களை வெளியிட்டுள்ளதுடன் ஆடம்பர வாகனக்கொள்வனவில் நான் ஊழலில் ஈடுபட்டதாக காட்டும் முயற்சியிலும் ஈடுபட்டனர். எனினும் அமைச்சரவையின் இரகசியங்களைப் பாதுகாக்கும் நோக்குடன் இதுவரை நான் அறிக்கைகளை வெளியிடவில்லை

இதேவேளை எனது பாதுகாப்புக்குக் குந்தகமாக நடந்து எனது உயிருக்கு ஆபத்து ஏற்படுத்தும் முயற்சியிலும் சில அமைச்சர்கள் ஈடுபடுகின்றனர். என்றும் அவ்வறிக்கையில் ஜனாதிபதி குற்றஞ் சாட்டியுள்ளார். (ந)

# மது போதையில் வந்த தந்தையை வெட்டிக் கொன்றான் தனயன்

### சுன்னாகத்தில் கொடூரம்

(ஏழாலை)

சுன்னாகம் கோட்டைக்காட்டுப் பகுதியில் மகன் தனது தந்தையை வீட்டில் வைத்து வெட்டிக் கொலை செய்த சம்பவம் ஒன்று நேற்று முன் தினம் இரவு 11.30மணியளவில் இடம் பெற்றுள்ளது.

கந்தையா தர்மலிங்கம்(வயது 55) என்பவரே இவ்வாறு வெட்டிக் கொலை செய்யப்பட்டவராவார்.

இக் கொலைச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது மது போதையில் வீட்டிற்கு வந்த தந்தைக்கும் மகனுக்கும் இடையே ஏற்பட்ட வாக்குவாதத்தை அடுத்து மகன்

(02ம் பக்கம் பார்க்க)

வாசகர்களே:-
நாளை திங்கட்கிழமை
வலம்புரியின்
வாரமலர்
சங்கு நாதம்
தவறாது வாங்கிப் படியுங்கள்

# புதிய இராணுவத் தளபதியாக ஜானகபெரேரா நியமனமாவர்?

(கொழும்பு)


ஸ்ரீலங்காவின் புதிய படைத்தளபதியாக முன்னாள் இராணுவ அதிகாரியும், அவுஸ்ரேலியாவில் ஸ்ரீலங்காவின் தூதுவராக கடமையாற்றுபவருமாகிய ஜானக பெரேரா நியமிக்கப்படலாம் என படை வட்டாரங்கள் தெரிவித்திருப்பதாக கொழும்பிலிருந்து வெளிவரும் நாளேடு ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஜானக பெரேரா இராணுவ உயர் அதிகாரியாக இருந்தபோது முல்லைத்தீவு மாவட்டத்தில் ஐ.தே. கட்சி ஆட்சிக் காலத்தில் ஜானகபுர குடியேற்றத் திட்டத்தை ஆரம்பித்து

(02ம் பக்கம் பார்க்க)

# ம.தி.மு.கவின் தடை பற்றி மத்திய அரசு பரிசீலிக்கும்

### துணைப் பிரதமர் அத்வானி அறிவிப்பு



(புதுடில்லி)

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக கழகத்தை தடை செய்யுமாறு தமிழக அரசு மத்திய அரசைக் கோரினால் அது பற்றி மத்திய அரசு பரிசீலிக்கும் என்று துணைப் பிரதமர் எல்.கே.அத்வானி தெரிவித்துள்ளார்.

நேற்று செய்தியாளர்களுடன் பேசிய அத்வானி வைகோவின் கைது விவகாரம் குறித்து பத்திரிகையாளர்கள் கேட்டதற்கு கருத்து தெரிவிக்க மறுத்து விட்டார.

அது பற்றி தான் எதுவும் கூற மாட்டேன் என்று கூறிய அவர் தமிழ் நாட்டில் சட்ட ஒழுங்கு பிரச்சினைஅது தொடர்பான சிக்கல்கள் தமிழக மாநில அரசின் பிரச்சினை என்றும் கூறினார். (இ)

### பொ.ஐ.முன்னணியின் 9எம்.பிகள் கைது

# அலரிமாளிகைக்கு முன்னால் எம்.பிக்கள் உண்ணாவிரதமிருப்பர்

(கொழும்பு)

பொ.ஐ.முன்னணியின்பாராளுமன்ற உறுப்பினர்கள் 9பேரை அரசாங்கம் கைது செய்து தடுத்து வைத்துள்ளதைக் கண்டித்து 15பாராளுமன்ற உறுப்பினர்கள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் வாசஸ்தலமான அலரிமாளிகைக்கு முன்பாக அடுத்த வாரம் உண்ணாவிரதம் இருக்கப்போவதாக அறிவித்துள்ளனர்.


பாராளுமன்ற உறுப்பினர்களான டீ.எம்.தஸநாயக்கா, டிலோன் பெரேரா, மகிந்தானந்த அலுகமகே கீர்த்தி இரத்தினநாயக்க, ஜனகபண்டாரா தென்னக்கோன், பியசேனகமகே, பந்துளகமகே, ஜனத்புஸ்பகுமாரா, அம்போத்த ரத்வத்தை ஆகியோரே கைது செய்யப்பட்ட

(02ம் பக்கம் பார்க்க)

# ஈழத் தமிழர் பிரச்சினையைத் தீர்க்க

### வடக்கின் மாபெரும் கிரிக்கெட்

# ஈழத் தமிழர் பிரச்சினையைத் தீர்க்க இரு தரப்பினரும் பேச வேண்டும்



## கவிஞர் வைரமுத்து பேட்டி

(சென்னை) இலங்கை அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் கடந்த கால ரணங்களை மறந்து எதிர்கால நன்மைகளைக் கருத்தில் கொண்டு பேச்சுவார்த்தையில் ஈடுபடவேண்டும்.

இவ்வாறு தமிழ்நாட்டின் பிரபல கவிஞரும் தென்னிந்திய திரைப்பட பாடலாசிரியருமாகிய வைரமுத்து வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்கையின் சமாதான முயற்சிகள் குறித்து பத்திரிகையாளர்களுக்கு கருத்து தெரிவித்த அவர் இவ் வேண்டுகோளை விடுத்தார் அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:

எதிர்கால நன்மைகருதி இலங்கை அரசும் விடுதலைப்புலிகளும் சமாதான பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதன் மூலமே நிரந்தரத் தீர்வைக் காண முடியும். கடந்த காலத்தை மறந்து எதிர்கால நன்மைகளைக் கருத்தில் கொண்டே பேச்சுவார்த்தை நகர்த்தப்படல் வேண்டும் இரண்டு தரப்பிலும் அழிவுகள் ஏராளம்

(02ம் பக்கம் பார்க்க)

### வடக்கின் மாபெரும் கிரிக்கெட்

# யாழ் மத்தியகல்லூரி அமோக வெற்றியீட்டியது

(யாழ்ப்பாணம்)

யாழ் மத்தியகல்லூரி, சென் ஜோண்ஸ் கல்லூரி அணிகளுக்கிடையில் கடந்த இரு நாட்களாக நடைபெற்ற மாபெரும் கிரிக்கெட் போட்டியில் யாழ் மத்திய கல்லூரி அமோக வெற்றியீட்டியது.

வடக்கின் பெரும் போரென வர்ணிக்கப்படும் 96வது கிரிக்கெட் போட்டி யாழ் மத்தியகல்லூரி மைதானத்தில் பெருந்திரளான கிரிக்கெட் ரசிகர்கள் மத்தியில் மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்றது

மத்திய கல்லூரி அணியினர் தமது அபார திறமையை வெளிப்படுத்தி வெற்றி இலக்கை அடைந்தனர்.

(02ம் பக்கம் பார்க்க)

### கைதிகளின் விவகாரம்

# தமிழ்க் கூட்டமைப்புத் தலைவர்கள் பிரதமர் ரணிலைச் சந்திப்பர்

(கொழும்பு)

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் களுத்துறைச் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகளின் விடுதலை தொடர்பாக. தமிழர் கூட்டமைப்புத் தலைவர்கள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவைச் சந்தித்துப் பேசவுள்ளனர்.

இப் பேச்சுக்களின் போது பாடசாலைகளில் இன்னமும் நிலை கொண்டுள்ள இராணுவத்தினரின் நிலை தொடர்பாகவும் கலந்துரையாடப்படவுள்ளதாக கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை களுத்துறைச் சிறையில் உள்ள தமிழ்க் கைதிகள் 19ம் திகதி வெள்ளிக்கிழமை உண்ணாவிரதம் இருக்கப் போவதாகவும் அறிவித்துள்ளார்கள்.

(வ)

### மட்டக்களப்பில் முதற்தடவையாக

# புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு படையினர் சென்று திரும்பினர்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு நேற்று முதற்தடவையாக இராணுவத்தினரும் பொலிஸாரும் சென்றனர்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டதை அடுத்து புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு புலிகளுடன் சேர்ந்து படைத்தரப்பினர் சென்றமை இதுவே முதற் தடவையாகும்.

ஏ-5 செங்கலடி பதுளை வீதி நாளை திறக்கப்படவிருப்பதால் அதனை உறுதிப்படுத்தும் வகையில் நேற்று விடுதலைப்புலி உறுப்பினர்கள், படைத்தரப்பினர் கண்காணிப்புக் குழுவினர், செஞ்சிலுவைச் சங்கப்பிரதிநிதிகள் ஆகியோர் பத்திரிகையாளர் சகிதம் அப் பகுதிக்குச் சென்று திரும்பினர்.

இதனை முன்னிட்டு மூன்று இராணுவ வாகனத்தில் ஆயுதம் இன்றி இராணுவச் சீருடையில் இராணுவத்தினரும் ஆயுதங்களுடன் சீருடையில் இரண்டு ஜீப்பில் பொலிஸாரும் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குச்

(8ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிறு விளம்பரம்

### வகுப்புக்கள்

ஆண்டு1இல் இருந்து மேற் படிப்புவரை சிறந்தஆசிரியர் கள் வகுப்பில் சிறுதொகை மாணவர்களுடன் ஆங்கிலத் தில் கூடியகவனமும் அனும திக்கு தலைமை ஆசிரியர் ந விக்னேஸ்வரன் ஆச்சாரி 426(302) காங்கேசன்துறை வீதி யாழ்ப்பாணம் (5651)

### கோழிக்குஞ்சு விற்பனை

Prima Broiler குஞ்சுகள் (Prima Hijira Green Valley) சிவப்பு, வெள்ளை பேட்டுக் குஞ்சுகள் 25.7.2002 வியா ழக்கிழமை மாலை பெற்றுக் கொள்ளலாம் முன்கூட்டி பதிவு செய்யவும்.

தனபாலசிங்கம், 19 முரு கேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (5643)

### ஆங்கில வகுப்புகள்

ஆங்கில வகுப்புகள் அனைத் தும் வழமைபோல் நடை பெறுகின்றன. கோ. சுப்பிர மணியம் 62, பழம்றோட், கந்தர்மடம். (5676)

### காணவில்லை

வெள்ளை நிறமும் மண்ணி றமும் கலந்த நெற்றியில் வெள்ளைநிற சுட்டியுள்ள பசு மாட்டை 10-07-2002 முதல் காணவில்லை. கண்டவர்கள் மா. யோகசர்மா 17 வெள் ளாந்தெரு, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அறியத் தரவும். சன்மானம் வழங்கப் படும். (C-4660)

## கலைநிலா அரங்கு

(யாழ்ப்பாணம)

யாழ். திருமறைக் கலாமன் றம் நடத்தும் மாதாந்த அரங்க நிகழ்வான ''கலை நிலா அரங்கு'' இம் மாதம் 28 ஆம் திகதி ஞயிற்றுக் கிழமை மாலை 6 45 மணிக்கு திருமறைக் கலாமன்ற, மன்ற அரங்கில் இடம்பெறவுள்ளது. திருமறைக் கலாமன்ற அவை யினர் வழங்கும் வில்லிசை, சுவிஸ் திருமறைக் கலாமன்ற மாணவியானசெல்வி. லாவண் யாவின் நடனம், ஆகியன அன்றைய தினம் இடம்பெற வுள்ளன. (உ-6)

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

அ) தொழிலாளர் கல்விச் சான்றிதழ் கற்கைநெறி 2001/2002

ஆ) தொழிலாளர் கல்வி டிப்ளோமா கற்கை நெறி 2001 / 2002

(யாழ்ப்பாணப்பல்கலைக் கழக தொழிலாளர் கல் விச் சான்றிதழ் கற்கை நெறியில் சித்தியடைந்த வர்கள் டிப்ளோமா கற்கைநெறிக்கு விண் ணப்பிக்கலாம்.)

மேற்படி கற்கை நெறி களுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர்2002.07.31 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை பரீட் சைகளும் அனுமதிகளும் கிளையில் பெற்று விண் ணப்பிக்கவும் ஏற்கனவே விண்ணப்பித்தோர் மீண் டும் விண்ணப்பிக்க தேவையில்லை.

பதிவாளர்

(கி-4656)

# பாதிப்புக்குள்ளான யாழ். கூட்டுறவு நிறுவனங்களை கட்டியெழுப்புவோம்

## கூட்டுறவு அமைச்சர் உரை

(அலுவலக நிருபர்)

கடந்த 20 வருடங்களாக நாட்டில் இடம்பெற்ற யுத்த அனர்த்தங்களினால் பாதிப் புக்குள்ளாகி இருக்கும் கூட்டு றவு நிறுவனங்களை நாம் எல் லோரும் ஒன்று சேர்ந்து கட்டி யெழுப்புவோம்.

இவ்வாறு கூட்டுறவுத்துறை அமைச்சர் அல்காஜ் ஏ. ஆர். எம். அப்துல்காதர் யாழ். கூட்டுறவாளர் மத்தியில்உரை யாற்றும்போது குறிப்பிட்டுள் ளார்.

யாழ். வீரசிங்கம் மண்டபத் தில் நேற்றுபிற்பகல் 3 மணிக்கு யாழ். அரச அதிபர் க. சண் முகநாதன் தலைமையில் நடைபெற்ற கூட்டமொன்றில் கூட்டுறவு அமைச்சர் ஏ. ஆர். எம். அப்துல்காதர், கூட்டு றவு அமைச்சின் செயலாளர் மேலதிக செயலாளர்கள், கூட் டுறவுத் திணைக்கள உயர் அதிகாரிகள் யாழ். கூட்டுறவு நிறுவனங்களின் தலைவர் களுடன்இந்துகலாசார அமைச் சர் தி. மகேஸ்வரன், யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப் பினர்கள், அ. விநாயகமூர்த்தி, மா வை. சேனாதிராசா, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எஸ். சிவமகா ராசா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

அங்கு அமைச்சர் தொடர்ந்து பேசுகையில்:

ஒரு காலத்தில் யாழ்ப்பா ணத்தில் உள்ள கூட்டுறவுச் சங்கங்கள் இலங்கையிலுள்ள கூட்டுறவு நிறுவனங்களிலும் பார்க்கதிறமான முறையில் இலாபகரமாக இயங்கி வந்தமை வரலாற்று உண்மை யாகும். இந்த நிலைமைக்கு யாழ்ப்பாணத்து கூட்டுறவு நிறுவனங்களைகட்டியெழுப்ப வேண்டியது எமது கடமையா கும்.

யாழ்ப்பாண விவசாய சமா சத்திற்குச் சொந்தமான கட்ட டத்தை மாக்பெட்டிடம் இருந்து பெறுவது என்னால் மட்டும் தனித்துச் செய்ய முடி யாது. எனது சகாக்களுடன் இணைந்து முடிந்தவற்றைச் செய்து தருகிறேன்.

இங்கு நான் வெறுங்கை யுடன் வரவில்லை. ஐந்து கூட் டுறவு நிறுவனங்களுக்கு வழங்குவதற்கென 5கணனி களைக் கொண்டு வந்துள் ளேன்.

மேலும்10கணனிகளை வழங்க நடவடிக்கை எடுப்பேன் என்றும் அமைச்சர் உறுதி கூறினார்.

இக்கூட்டத்தின் போது பல்வேறு கூட்டுறவு நிறுவனங் களைச் சேர்ந்த தலைவர்கள் தத்தம் பிரச்சினைகளை எடுத்துக் கூறி மகஜர்கள் கையளித்துள்ளனர்.

(ம- 6, 19)

## வர்த்தகரின் நன்மை கருதி வங்கி கடமை நேரம் நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டிலுள்ள சகல தனியார் வங்கிகளும்இலங்கை வங்கியின் மேற்தரக்கிளையும் சகல வேலை நாட்களிலும் பிற்பகல் 3மணிவரை கொடுக் கல் வாங்கல்களை மேற் கொள்ளவுள்ளன.

கடந்த 4ஆந் திகதி யாழ். வணிகர்கழகப் பணிமனையில் வணிகர்கழக நிர்வாகசபை உறுப்பினர்களுக்கும் வங்கி முகாமையாளர்களுக்கும் இடையே நடைபெற்ற கலந் துரையாடலிலேயே மேற்படி இணக்கம் காணப்பட்டது.

இதேவேளை மக்கள் வங்கி யின் கணனிமயப்படுத்தப் பட்ட ஸ்ரான்லிவீதிக்கிளை பிற்பகல் 3 மணிவரையும் ஏனைய கிளைகளில் பிற்பகல் 2மணிவரையும் கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெறவுள் ளன.

சில்லறை தட்டுப்பாட்டைத் தவிர்க்கும் பொருட்டு தற் போது மக்கள் வங்கிக் கிளை களில் சில்லறைக்காசுவழங்கப் படுவதாகவும் அவற்றைப் பெற்று வர்த்தக நடவடிக்கை களில் ஈடுபடுமாறுசகல வர்த் தக நிறுவனங்களும் கேட்கப் பட்டுள்ளது. (ஷ)

## சமாதான முயற்சிகளுக்கு இந்தியா பூரண ஆதரவு

### வெளியுறவு அமைச்சர் அறிக்கை

(கொழும்பு)

இலங்கையில் நடைபெற்று வரும் சமாதான பேச்சுவார்த் தைகளுக்கு இந்தியா பூரண ஆதரவை தெரிவித்துள்ளது.

இலங்கை வந்துள்ள இந்திய வெளியுறவு அமைச்சர் ஜஸ் வந்சிங்கா பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவை சந்தித்த பின்னர், வெளியிடப் பட்ட கூட்டறிக்கையில் மேற்கண்ட வாறு தெரிவிக்கப்பட்டுள் ளது.

அமைச்சர் ஜஸ்வந்சிங்கா இலங்கையின் ஐக்கியம், இறைமை, பிராந்திய ஒரு மைப்பாடு என்பனவற்றுக்கும் இங்கு இரு தசாப்தங்களாக போரை முடிவுக்கு கொண்டு வந்து நிரந்தர அமைதியை நிலைநாட்டுவதற்கும் தமது நாட்டின் கடப்பாட்டை அவ் வறிக்கையில் வலியுறுத்தியுள் ளார்.

இனப்பிரச்சினைக்கான தீர்வு, அனைத்து சமூகங்களின தும் நியாயமான அபிலாஷை களை தீர்க்கக் கூடியதாக இருக்க வேண்டும்.

சர்வதேச பயங்கரவாதம் நாடுகளிடையேயுள்ள சமா தானம் பாதுகாப்பு என்பன வற்றுக்கு அச்சுறுத்தலாக இருந்துவருகிறது.

இதனால் இந்தப் போக்கை ஒழித்துக் கட்டுவதற்கு உலக ளாவிய ரீதியில் மேற்கொள் ளப்படும் அனைத்து முயற்சி களுக்கும் இவ் விருநாடுகளும் தமது ஒத்துழைப்பை வழங்கி யுள்ளன.

பொருளாதார உறவுகளை இவ்விரு நாடுகளிடையேமேம் படுத்துவது பற்றியும் இதன் மூலம் இந்தியா இலங்கைக்கு 5 கோடி டொலருக்கு அதிக மான நிதியை கொண்டுள்ள இரு கடன் திட்டங்களை வழங்குவதற்கும் இணங்கி யுள்ளதுஎனவும் அக்கூட்டறிக் கையில் தெரிவிக்கப்பட்டுள் ளது. (உ-8)

### புதிய இராணுவ

வைத்தவர் என்றும், செம்ம ணிப்புதைகுழி விவகாரத்தி லும்தொடர்புடையவர் என் றும்அப்போது பரவலாகப் பேசப்பட்டு வந்தமை குறிப் பிடத்தக்கது.

ஜானக பெரேரா அவுஸ்ரே லியத் தூதுவராகச் சென்ற போது இவரைத்தூதுவராக நியமிக்க வேண்டாமென்று அங்குள்ள தமிழ் மக்கள் ஆட் சேபித்திருந்தமையும் இங்கு சுட்டிக்காட்டுதற்குரியதுஇதே வேளை இராணுவத்தளபதி யாகவருமாறு படைத்தரப்பு விடுத்த வேண்டுகோளுக்கு இதுவரை ஜானக பெரேரா எதுவிதபதிலும் அளிக்க லில்லையென்றும் தெரிவிக்கப் படுகிறது. (ம)

### அமைச்சரின்

தோட்டத் தொழிலாளர் களின் சம்பளப் பிரச்சினை காரணமாகவே பிரதியமைச் சர்முத்துசிவலிங்கத்தின்யாழ்ப் பாண விஜயம் பின்தள்ளிப் போடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ம)

### மதுபோதையில்

தந்தையை வெட்டிக் கொலை செய்ததாகத் தெரிவிக்கப்படு கிறது.

இக்கொலைச் சம்பவம் தொடர்பாக மல்லாகம் மாவட்ட நீதிமன்ற நீதிபதி பா. சுப்பிரமணியம் ஸ்தலத் திற்குச் சென்று விசாரணை களை மேற்கொண்டதுடன் வைத்திய பரிசோதனையை மேற்கொள்வதற்காக சடலத்தை யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லவும் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

தந்தையைக்கொலைசெய்த தாகச் சந்தேகிக்கப்படும் 19வயது நிரம்பிய மகனைச் சுன்னாகப் பொலிஸார் கைது செய்துள்ளனர். சடலம் விசா ரணையின் பொருட்டு யாழ். போதனாவைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

(வ- 6- 12)

### யாழ். மத்திய

அவர்களை எதிர்த்து ஆடிய சென்ஜோன்ஸ் கல்லூரி அணி யினரும் சளைக்காமல் மிகவும் சிறப்பாக ஆடினர்.

முதல்நாள் ஆட்டத்தில்முத லில் துடுப்பெடுத்தாடிய சென் ஜோன்ஸ் அணியினர் 65ஓவர் களில் சகல விக்கற்றுகளையும் இழந்து 102 ஓட்டங்களைக் குவித்தனர்.

எதிர்த்துக் களமிறங்கிய சென்றல் அணியினர் 9விக் கெற் இழப்புக்கு 176ஓட்டங் களைக் குவித்தனர்.

முதல் நாளே இரண்டாவது இனிங்சை ஆரம்பித்து நேற் றும் தொடர்ந்து துடுப்பெடுத் தாடிய சென்ஜோன்ஸ் அணி யினர் சகல விக்கற்றுக்களை யும் இழந்து 123ஓட்டங்களை எடுத்தனர்.

பதிலுக்கு களமிறங்கிய சென்றல் அணியினர் நான்கு விக்கெற் இழப்பில் வெற்றி இலக்கை அடைந்தனர்.

நடை பெற்றுமுடிவடைந்த ஆட்டத்தில் சிறந்த விளை யாட்டு வீரனாக மத்திய கல் லூரி அணியைச் சேர்ந்த எஸ். விமலகாந்தன், சகலதுறை ஆட்டக்காரனாக சென் ஜோன்ஸ் அணித்தலைவர் பி. லவேந்திரா, சிறந்ததுடுப்பாட் டக்காரனாக மத்தியகல்லூரி அணியைச் சேர்ந்த கே. கார்த் திக் சிறந்தபந்து வீச்சாளராக மத்திய கல்லூரி அணியைச் சேர்ந்த எஸ். சிவகுமார் சிறந்த பந்து தடுப்பாளராக சென்ஜோன்ஸ் அணியைச் சேர்ந்த அகிலன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

இப் போட்டியின் நடுவர் களாக எஸ். முருகவேள், ஆர். சிவகரன் ஆகியோர் கடமை யாற்றினர்.

இதேவேளை யாழில் இடம் பெற்ற இக் கிறிக்கெற் ஆட் டத்தில் பங்குபற்றிய வீரர்க ளுக்கு பெறுமதி வாய்ந்த பரி சில்களை அபான்ஸ் நிறுவனம் வழங்கியமையும் இங் குறிப் பிடத்தக்கது. (இ-110)

## இரத்ததானம்

(யாழ்ப்பாணம்)

புளொட் அமைப்பினரால் அனுஷ்டிக்கப்பட்டவீரமக்கள் தினத்தை ஒட்டி புளொட் அமைப்பின் உறுப்பினர்கள் யாழ். போதனா வைத்திய சாலையில் இரத்ததானம்செய் துள்ளனர்.

அத்துடன் இத்தினத்தை ஒட்டி இன்றும், நாளையும் பொது இடங்களிலும் யாழ். போதனாவைத்திய சாலைப் பகுதிகளிலும்புளொட்உறுப்பி னர்கள் சிரமதானம் மேற் கொள்ளவுள்ளனர்.

(வ- 19- 6)

### அலரி மாளிகை,

பாராளுமன்ற உறுப்பினர் களாவர். அரசியல்பழிவாங்கல் களுக்காகவே இவர்களைக் கைதுசெய்து அரசாங்கம் தடுத்து வைத்துள்ளதாகவும், இது குறித்து பலதடவை பிர தமரிடம்கூறியும் அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படாத தால் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட விருப்பதாகவும்சிரேஸ்டஉறுப் னர் ஒருவர் தெரிவித்துள் ளார். (ந-5)

### ஈழத் தமிழர்...

காயங்கள் பல, இழப்புகள் எண்ணற்றவை.

இருப்பினும் இருதரப்பும் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதன் மூலம்தான்ஒரு நிரந்தரத்தீர்வைக் காணமுடி யும்.

இனப்பிரச்சினைக்கு இரு வழிகளில் தீர்வு காண முடி யும். ஒன்று போரின் மூலம் மற்றையது அகிம்சைமூலம்

போரைக்கைவிட்டு அகிம் சையை நோக்கி இருதரப்பி னரும் பயணிப்பது நிரந்தர சமாதானத்துக்கான அறிகுறி யாகவே தோன்றுகிறது.

இலங்கையுடன் பல்வேறு பட்டரீதியில் தொடர்புகளை வைத்திருப்பவன் என்ற வகை யில், பிரதமர் ரணில்விக்கிரம சிங்காவின் சமாதானமுயற்சி களை வரவேற்கின்றேன். அவரின் பரந்தமனப்பான்மை பாராட்டத்தக்கது.

இனப்பிரச்சினைக்கான தீர்வு இருதரப்புக்கும் நன்மை யளிக்கக் கூடிய தீர்வாக காணப்பட வேண்டும். அப் போது தான் எதிர்காலத்தில் சிக்கல்கள் எழாது. பிரதமரின் பரந்த மனப்பான்மை இன்ன மும் விரிவடைய வேண்டும்.

ஈழத்தமிழ் மக்கள் சுயநிர் ணய உரிமையுடனான தீர் வைப் பெறுவதேபிரச்சினைக் குரிய சரியான தீர்வாக அமை யும். இத்தீர்வே போராட்டத் தில் இதுவரை பலி கொடுத்த காவு கொண்ட போராளி களுக்கும்பயனுள்ளதாகஅமை யும்.

தமிழக மக்கள் ஈழத் தமிழ் மக்களை என்றுமே பிரித்துப் பார்த்ததில்லை அரசியல் சூழ லினால் தமிழக மககள் தமது ஈழத்தமிழர் ஆதரவை வெளிப் படுத்தமுடியாதுபொத்திவைத் துள்ளனர்நீறுபூத்தநெருப்பாக தமிழகமக்களின்நெஞ்சங்களில் ஈழத் தமிழர்கள் உள்ளனர் என்று தெரிவித்த கவிஞர் வைரமுத்துவிடம் இலங்கை யில் போர் ஓயுமா என்று பத் திரிகையாளர்கள் கேட்டதற்கு

தொடக்கம் எல்லாம் முடி வடைய வேண்டும் என்பதே யதார்த்தம் நடந்தவைநடந்த வையாக இருக்கட்டும். நடப் பவை நல்லவையாகஅமையட் டும் எனக் கருதி இருதரப்பின ரும் பரஸ்பரம் புரிந்துணர்வு டன் செயற்பட வேண்டும் போரினால்முடியாது அகிம்சை யினால் தான் முடிவு உண்டா கும்என்று இருதரப்பும்உணர்ந் தால் தான் நிரந்தரமாகப் போர் ஓய்வது நிச்சயம் என்று கூறினார்

புலிகளின்தடை இந்தியா வில் நீடிக்கப்பட்டுள்ளதேஇது குறித்து உங்களின் கருத் தென்ன என்று கேட்டதற்கு.

அது பற்றி கருத்துக் கூற இன்னமும் காலம் கனியவில் லை என்று கூறினார். (இ)

### அமெ. பயணத்தின் பின்னரே

# தாய்லாந்து பேச்சுக்குறித்த முக்கிய முடிவுகளை பிரதமர் எடுக்கக்கூடும்

(கொழும்பு)

பிரதமரின் அமெரிக்க விஜயத்தின பின்னரே விடுதலைப் புலிகளுடன் தாய்லாந்தில் நடைபெறவுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்பாக எடுக்கப்படவுள்ள முடிவுகள் தெரியவரும் என்று அரசியல் வட்டாரங்கள் கருத்து வெளியிட்டுள்ளன.

அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ்ஷின் விசேட அழைப்பை ஏற்று எதிர்வரும் 19 ஆம் திகதி பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் அவருடன் பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொடவும் அமெரிக்கா செல்லவுள்ளதும்,

24 ஆம் திகதி அதிபர் புஷ்ஷைச் சந்தித்து புரிந்துணர்வு உடன்படிக்கையையடுத்து இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றங்கள் அரசாங்கம் சமாதானத்தை நிலை நாட்ட எடுத்துள்ள நடவடிக்கைகள் விடுதலைப் புலிகள் இயக்கத்துடனான சமாதானப் பேச்சுவார்த்தை உட்பட பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்படவுள்ளதும் தெரிந்ததே. (உ-3)

# கிழக்கு பாதுகாப்பைப் பலப்படுத்த மேலதிக பொலிஸார் கடமையில்

### சபையில் பாதுகாப்பு அமைச்சர்

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் மீண்டும் அசம்பாவிதங்கள் ஏற்படாது தடுக்கும் முகமாக மேலதிக பொலிஸாரை கடமையில் ஈடுபடுத்தப் போவதாக பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன நேற்றுமுன்தினம் பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

வாய்மூல கேள்விகளுக்கு பதிலளிக்கப்பட்ட பின்னர், சபாநாயகர் யோசப் மைக்கல் பெரேராவின் விசேட அனுமதியுடன் கிழக்கு மாகாண அசம்பாவிதங்கள் குறித்த அறிக்கையை சமர்ப்பித்து பேசுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் நடைபெற்ற வன்செயல்கள் போன்று எதிர்வரும் காலங்களிலும் உணர்ச்சிகளைத் தூண்டிவிடும் வகையில் ஆர்ப்பாட்டங்களை நடத்த திட்டமிட்டுள்ளவர்களுக்கு எதிராகவே மேலதிக பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

இதனை முன்னிட்டு கிழக்கின் பல பாகங்களிலும் பொலிஸ் நிலையங்கள் திறக்கப்படவுள்ளதுடன், வாழைச்சேனைப் பகுதியில் கண்காணிப்பு குழு அலுவலகம் ஒன்றும் திறக்கப்படவுள்ளது எனவும் அவர் அங்கு தெரிவித்துள்ளார். (உ-8)

# மனித உரிமை ஆணைக்குழு அலுவலகம் கணனிமயம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட மனித உரிமை ஆணைக்குழு அலுவலகம் கணனி மயப்படுத்தப்பட்டுள்ளது.

இதனை மேற்கொள்ள அரசாங்கம் அலுவலகத்துக்கு தேவையான கணனிகளை வழங்கியதாகவும்,

அத்துடன், ஆணைக்குழு வேலைகளைக் கவனிப்பதற்கென்று விசேட வாகனம் ஒன்றும் அரசால் வழங்கப்பட்டுள்ளதாகவும் ஆணைக் குழு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (இ-19-6)

# பாதாள உலக தலைவருக்கு பலத்த பாதுகாப்பு

(கொழும்பு)

அண்மையில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் காயமடைந்து கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சைபெற்றுவரும் பாதாள உலகக் கோஷ்டி தலைவர் மொறட்டுவ சமனுக்கு வைத்தியசாலையில் பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

பல முக்கிய குற்றச்செயல் சம்பவங்களில் இவர்சம்பந்தப்பட்டிருக்கலாம் என்பதனாலேயே 18 பொலிஸாரும் 6 தனிப்பட்ட பாதுகாவலர்களும் இவருக்கு பாதுகாப்பு வழங்கி வருவதாக பொலிஸ் தலைமையக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (உ-3)

# கலந்தாலோசனை நடத்த இந்தியா வருமாறு ஹக்கீமுக்கு அழைப்பு

(கொழும்பு)

இந்தியத் தலைவர்களுடன் கருத்துப்பரிமாற்றம்ஒன்றைச் செய்து கொள்வதற்கு கப்பல் துறை கிழக்கு அபிவிருத்தி முஸ்லிம் விவகார அமைச்சர் ரவூப்ஹக்கீமை புதுடில்லிக்கு வருமாறு இந்தியா அழைப்பு விடுத்துள்ளது.

இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந் சிங்கா நேற்று முன்தினம் கொழும்பில் நடத்தியபேச்சுவார்த்தைகளின் போதேஇவ்வழைப்பை விடுத்துள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற ஹக்கீமுடனான பேச்சுவார்த்தைகளின் போது வடக்கு.கிழக்கு பிரச்சினைகள் தொடர்பாக கலந்தாலோசனை நடத்தப்பட்டதுடன் ஹக்கீமின் கருத்துக்களை இந்திய அமைச்சர் வரவேற்றுள்ளதாக அமைச்சு வட்டாரங்கள தெரிவித்துள்ளன. (உ-8)

### மாமியார் மகிமை

ஆகிவிட்டார்கள்'' என்றான், அதுவே ஒரு பழமொழியாக நிலைத்துப்போனது

இப்போதும் இந்தப்பழமொழிஇருக்கிறது, ஆனால் அதுபோல் யாரும் செய்வதில்லை. இந்தக்காலத்து பிள்ளையாண்டான் ஒருவனிடம் ''நீயாக இருந்தால் அந்த நிலையில் என்னடா செய்வாய்? என்று கேட்டேன், அவன் சுற்றும் முற்றும்பார்த்துவிட்டு வந்து மெதுவாகஎன் காதுக்குள்'' நானாக இருந்தால் களிமண் பொதியை என் சம்சாரத்திடமே கொடுத்தனுப்பியிருப்பேன்'' என்றான்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

### சபுகஸ்கந்த சம்பவம்

# மக்கள் விடுதலை முன்னணி பின்னணியில் இருந்தது

### அறிக்கையில் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

சபுகஸ் சந்தவில் அண்மையில் இடம் பெற்ற சம்பவங்களுக்கு மக்கள் விடுதலை முன்னணியே பின்னணியில் இருந்துள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சபுகஸ்கந்தையில் பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட இளைஞன் ஒருவன் மரணமடைந்த சம்பவத்தைஅடுத்து அங்கு ஏற்பட்ட கலவரம் தொடர்பான பின்னணி குறித்து நேற்று முன்தினம் பாராளுமன்றக் கட்டடத் தொகுயில் இடம்பெற்ற அரசாங்கக்குழுககூட்டத்தில் பிரதம மந்திரி அலுவலகத்திலிருந்துவெளியிடப்பட்ட அறிக்கையொன்றிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக மின்சக்தி அமைச்சர் கருஜெயசூரியாவினால் கோரப்பட்ட பொலிஸ் அறிக்கையொன்று தற்போதுகிடைக்கப்பெற்றுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா அங்கு தெரிவித்துள்ளார்.

மக்கள் விடுதலை முன்னணியின் சபுகஸ்கந்த பிரதேசசபை உறுப்பினர் ஒருவரும் செயற்குழு உறுப்பினர் ஒருவருமே இதற்கு காரணம் என அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-8)

# சர்வதேச கூட்டுறவுத்தின இரண்டாம் நாள் நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

கட்டைவேலி, நெல்லியடி ப.நோ கூ.சங்கம் 80 ஆவது அனைத்துலகக் கூட்டுறவுத்தினத்தை முன்னிட்டு நடத்தி வரும் கூட்டுறவு வார நிகழ்வுகளின் இரண்டாம் நாள் நிகழ்வுகள் இன்று தலைவர் த.சிதம்பரப்பிள்ளை தலைமையில் நெல்லியடி ம.ம.வித்தியாலயத்தில் முற்பகல் 9.30 மணிக்கு ஆரம்பமகாவுள்ளன.

இன்றைய நிகழ்வில் தமிழீழ நிர்வாகத்துறைப் பொறுப்பாளர் செ.குட்டி சிறப்புரையாற்றவுள்ளார்.

''கல்விச் சமூகமும் கூட்டுறவும்'' எனும் தலைப்பில் நெல்லியடி ம.ம.வித்தியாலய அதிபர் செ.சேதுராஜாவும், கூட்டுறவும் மகளிரும்'' எனும் 'தலைப்பில் திருமதிபண்டிதை வ.பத்தினிப் பிள்ளையும்கருத்துரை வழங்குவார்கள்.

தொடர்ந்து மூத்த கூட்டுறவாளர் மற்றும் பணியாளர் கௌரவிப்பு, கலைநிகழ்ச்சிகள் என்பனவும் இடம் பெறவுள்ளன. (ஷ)

# முஸ்லிம் நலன் காப்பக பிரதிநிதிகள்-கரிகாலனுடன் சந்தித்துப் பேச்சு

(மட்டக்களப்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டு - அம்பாறை சிறப்பு அரசியல்துறைப் பொறுப்பாளர் கரிகாலனும், முஸ்லிம் மக்கள் நலன் காக்கும் அமைப்புப்பிரதிநிதிகளும் நேற்றுமுன்தினம் வாகனேரியில் சந்தித்துப் பேசியுள்ளனர்.

இந்தச் சந்திப்பின்போது வாகனேரிப் பகுதியில் முஸ்லிம், விவசாயிகள் எந்தவித அச்சமுமின்றி விவசாய நடவடிக்கைகளில்ஈடுபடலாமென விடுதலைப்புலிகளினால்உத்தரவாதம் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இச்சந்திப்பில் கொள்கைத் திட்டமிடல் அமைச்சின் ஆலோசகர் அலிஸாகிர் மௌலானா, 232 வதுபடைப் பிரிவின் சிவில்இணைப்பதிகாரி மேஜர் பேர்பின் பெரேரா மற்றும் விடுதலைப் புலிகளின் மட்டு-அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் விசு, ஆண்டான் குளம் அரசியல்துறை பொறுப்பாளர் சேனாதிஆகியோரும் கலந்து கொண்டனர். (த)

# எட்டு வயது மகளை முரட்டுத்தனமாக தாக்கிய தந்தை பொலிஸாரால்கைது

(தங்கொட்டுவ)

தனது எட்டு வயது மகளை முரட்டுத்தனமாகத் தாக்கிய தந்தை ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மேற்படி சம்பவம்தங்கொட்டுவப் பகுதியிலே இடம்பெற்றுள்ளது.

மனைவி வேறொருவரைத் திருமணம் செய்துள்ள காரணத்தால் மனைவியைப் பழி வாங்குமுகமாகவே மேற்படி செயலைச் செய்திருக்கலாமெனபொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அச்சிறுமி தற்பொழுது தங்கொட்டுவ அரசினர்வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். சிறுமியின் உடலில் 50ற்கு மேற்பட்ட அடிகாயங்கள் காணப்படுவதாகவும் மிகவும் ஆபத்தான நிலையில் இருப்பதாகவும் ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ஷ-19)

### இயல்பு நிலையை தோற்றுவிக்கக்கோரி

# வேலணையில் செவ்வாய் மறியல் போராட்டம்

(ஊர்காவற்றுறை)

தீவகத்தில் இயல்பு நிலையைத் தோற்றுவிக்கக் கோரி தீவகவெகுஜன அமைப்புகள் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை வேலணையில் மறியல் போராட்ட மொன்றை நடத்த ஏற்பாடு செய்துவருகின்றன.

பொதுக் கட்டடங்களில் இருந்து கடற்படையினர் இதுவரை வெளியேறாமைமற்றும் வீதிகள் பொது மக்களின் பாவனைக்குத் தடைசெய்யப்பட்டுள்ளமை ஆகியவற்றைக் கண்டித்தே இம் மறியற் போராட்டம் இடம் பெறவுள்ளது.

மேற்படி போராட்டத்திற்கு பொது அமைப்புகள் பலவும் தமது ஆதரவைத் தெரிவித்துள்ளன.

இதேவேளை, கடந்த 9 ஆம் திகதி வேலணை மத்திய கல்லூரி மாணவ சமூகம் வீதிகளைத் திறக்கக் கோரி அடையாள மறியற்போராட்டத்தில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது. (ஷ-75)

# தே. இ. சே. ம. தலைமையக ஆய்வு அபிவிருத்திக்குழுயாழ்.வருகை

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தலைமையகத்திலிருந்து ஆய்வு அபிவிருத்திக் குழுவொன்று கடந்த வியாழனன்று யாழ்ப்பாணம் வருகை தந்துள்ளது.

யாழ். மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்திற்கு வருகை தந்துள்ள இக்குழுவினர், யாழ். உதவி இயக்குநர், இளைஞர் சேவைகள் உத்தியோகத்தர்கள் சகிதம் இளைஞர் வேலைத் திட்டங்கள் பற்றி பல்வேறுபட்ட தலைவர்களுடன் கலந்துரையாடி பிரச்சினைகளை கேட்டறிந்து வருகின்றனர்.

இவர்கள் கிளிநொச்சி, யாழ்ப்பாணம் பகுதிகளில் உள்ள விடுதலைப் புலிகளின் அரசியல் தலைவர்களுடன் பேச்சு வார்த்தைகளைநடத்தியுள்ளதாகவும் மேலும் யாழ். அரச அதிபர், ஜி.ரி.சற் நிறுவனம் ஆகியவற்றுடனும் இளைஞர் அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து கலந்துரையாடிய தாகவும் தெரிவிக்கப் படுகிறது.

இதேவேளை, கடந்த வெள்ளியன்றுயாழ். மாவட்ட இளைஞர்கள், இளைஞர் சேவை உத்தியோகத்தர்களிடையேயானசந்திப்பொன்றும் மாவட்ட அலுவலக கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது.

இதில் தாம் இலங்கை இளைஞர் சம்மேளனத்தின் 9 ஆவது தெரிவை யாழில் நடத்தி இருப்பதாகவும் இதற்காக 300 பேர் அடங்கிய இளைஞர், யுவதிகள் குழுவொன்று நாட்டின் சகல பாகங்களிலிருந்தும்யாழ். வரவுள்ளதாகவும்,

எதிர் காலத்தில் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற வடமாகாண பணிமனையை கிளிநொச்சியில் அமைப்பது குறித்து ஆராய்ந்து வருவதாகவும்இளைஞர் சேவைகள் உத்தியோகத்தர் வெற்றிடங்கள்பத்திரிகைகள் மூலம் விளம்பரப்படுத்தி நிரப்பப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (உ-59)

**சோதிட பலன்**

# ஒவ்வொரு கிரகமும் தான் நிற்கின்ற வீட்டின் பலாபலன்களை எவ்வாறு வழங்குகின்றன?

(சென்ற வாரத் தொடர்ச்சி)

## செ. சோதிநாதன்

ஐந்தாம் வீடு

இலக்கினாதிபதி ஐந்தில் நின்றால் கோபம், கெட்ட பிள்ளைகள், ;இரண்டாதிபதி ஐந்தில் நின்றால் குடும்ப விரோதி, கெட்ட பழக்கம், மூன்றாதிபதி ஐந்தில் நின்றால் பணம், குடும்பச்சச் சாவு, பிள்ளைகளாற் பலனில்லை. மந்திரி உத்தியோகம், சகோதரருக்குப் பெரிய உத்தியோகம், நாலாதிபதி ஐந்தில் நின்றால் பணம், மற்றவர்களால் மதிக்கப்படுதல். ஐந்தாதிபதி ஐந்தில் நின்றால் பல பிள்ளைகள், தலைவர், கணிதவல்லவர், சனி, இராகு, நின்றால் மூளைக் குறைவாயிருக்கும், துக்கம், பிள்ளைகளின்மை, சூரியன் நின்றால் இருதய வியாதி, ஆயுள் குறைவு, பிள்ளைகள், பணம் சந்தோசக் குறைவு சந்திரன் நின்றால் கூரிய மூளை, நல்ல பிள்ளைகள், சந்தோஷம். செவ்வாய் நின்றால் புறங்கூறல், நிம்மதியற்ற மனம், துக்கம். புதன் நின்றால் கல்வி, சந்தோஷம், மந்திரி, விவேகம், கீர்த்தி. வியாழன் நின்றால் கடவுள் பக்தி, கல்வி, விவேகி, புத்திசாலி, நல்ல வாகனம், சிநேகிதர்கள் உடைமை. வெள்ளி நின்றால் வடிவான பெண்பிள்ளைகள், சிநேகிதம், சந்தோஷம். கேது நின்றால், பிள்ளைகள் சாதல், வயிற்று நோய், பிற்காலம் ஞானப் போக்கு. ஆறாதிபதி ஐந்தில் நின்றால் வளர்ப்பிணிப் பிள்ளை, நல்லாயிருப்பான். ஏழாதிபதி ஐந்தில் நின்றால் செல்வம், புத்திரர்.

ஆறாம் வீடு

இலக்கினாதிபதி ஆறில் நின்றால் கடன்படல், இலக்கினாதிபதியின் தெசை அல்லது புத்தி நடக்கும் போது கடன் தீரும். இரண்டாதிபதி ஆறில் நின்றால் மூல வியாதி, கள்ள வியாபாரம், ஆட்களை பகைப்பண்ணுதல், மூன்றாதிபதி ஆறில் நின்றால் இனத்துடன் பகை, சகோதரர்களால் உதவி, சட்ட விரோதமான உழைப்பு. நாலாதிபதி ஆறில் நின்றால் தாய் இறத்தல், அலைச்சல், கோபம், கெட்ட பழக்கம், ஐந்தாதிபதி ஆறில் நின்றால் தாய் மாமன் பெரியவனாவான், பிள்ளைகள் எதிரிகளாவர் ஆறாதிபதி ஆறில் நின்றால் தாய் மாமன் பெரியவனாவான், பேர் போனவர் இலக்கினாதிபதியும் நின்றால் மாற்ற முடியாத சுகவீனம் இனத்தவருடன் பகை, கெட்ட கிரகங்கள் ஆறாம் வீட்டில் நின்றால் அல்லது பார்த்தால் எதிரிகள் குறைவு நல்ல கிரகங்களாயின் எதிரிகள் கூடுவர். சூரியன் நின்றால் சுகவீனம், பேர், புகழ், சந்திரன் நின்றால் சின்ன வயதில் வியாதி, பெண்களுக்குக் கீழ்ப்படிதல். செவ்வாய் நின்றால் வீரம், மரியாதை, இனத்தவரின் தொல்லை புதன் நின்றால் கல்வித் தடை, சண்டை, நரம்புத் தளர்ச்சி, வியாழன் நின்றால் சோம்பல், துர் அதிர்டம், கெட்ட கிரகச் சேர்க்கை அல்லது பார்வையிருந்தால் சுகவீனம் வெள்ளி நின்றால் பகைவரில்லை, இளம் பெண்களால் கெடுதி, சனி நின்றால் எதிரிகளில்லை வீரம், பிடித்தபிடி, நல்லாய்ச் சாப்பிடுவர் இராகு நின்றால் நல்ல ஆயுள் பணம், வீட்டுச் சீவியம் சந்தோஷமில்லை. கேது நின்றால், பேர், புகழ் தலைமை, எதிரிகளின்மை மதியூகம். ஏழாதிபதி ஆறில் நின்றால் களத்திரத்துடன் பகைசுகவீனமுள்ள களத்திரம்.

ஏழாம் வீடு

இலக்கினாதிபதி ஏழில் நின்றால் ஒன்றுக்கு மிஞ்சிய தாரம், இரண்டாதிபதி ஏழில் நின்றால் மருத்துவர், புருஷனும், பெண் சாதியும் வேறு ஆட்களுடன் தொடர்பு வைத்தல் மூன்றாதிபதி ஏழில் நின்றால், அரசாங்கத்துடன் பகை பிரயாணம் செய்யும் போது இடையூறு, மூன்றாதிபதி ஏழாதிபதியுடன் ஏழில் நின்றால் சகோதரம் பிறநாடு சென்றுவரும், ஏழாம் வீடு பல மாயின் சந்தோஷம், நாலாதிபதி ஏழில் நின்றால் காணி, பூமி, சந்தோஷம், ஐந்தாதிபதி ஏழில் நின்றால் மகன் பிறநாட்டில் நல்லாயிருப்பான். பேர், புகழ், பிள்ளைகள் பலர். ஆறாதிபதி ஏழில் நின்றால், மனைவியின் நடத்தைசந்தேகத்துக்குரியது மூலவியாதி, சூரியன் நின்றால் இரண்டு தாரம், சஞ்சலமான மனம் சந்திரன் நின்றால் களத்திர சுகம், புத்திர மித்திர சுகம், செவ்வாய் நின்றால் இரண்டுதாரம் வியாதி கடுங் கோபம். புதன் நின்றால் இரண்டுதாரம், பெண் சொற் கேட்டல், பிதாவிலும் விசேடம். வியாழன் நின்றால் களத்திர சுகம், ஞானம், கல்வியிற் பொருள், செலவு செய்தல், வெள்ளி நின்றால் இரண்டு தாரம் பிரபலம், காம மிகுதி, சனி நின்றால் வயதிற்கு மூத்த களத்திரம் தரித்திரம், களத்திர சுகமின்மை. இராகு நின்றால் கீர்த்தி களத்திர சுகவீனம், வயதிற்கு மூத்த ஆணிலோ, பெண்ணிலோ, ஆசை. கேது நின்றால் களத்திர சுகவீனம், மர்மஸ்தானங்களில் வியாதி, சோம்பல், ஏழாதிபதி ஏழில் நின்றால் ஏழிலான தோற்றம் ஒழுக்கம்.

-வளரும்

# பள்ளத்தில் பாய்ந்து கைதி தப்பியோட்டம்

(கொழும்பு)

மாத்தளை நீதி மன்றத்தில் இருந்து ரயில் மூலம் கண்டி சிறைச்சாலைக்கு கொண்டு செல்லும் வழியில் கைதி ஒருவர் தப்பியோடியுள்ளார்.

மேற்படி கைதி தான் தப்புவதற்காக, சிறைச் சாலை அதிகாரியைக் கட்டிப்பிடித்தபடி 60 அடி பள்ளத்தில் பாய்ந்ததில் அந்த அதிகாரிகால்முறிந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேலும் தப்பியோடிய கைதி பல வழக்குகளில் சம்பந்தப்பட்டவர் என்பது குறிப்பிடத் தக்கது.

(உ-3)

# இ- வர்த்தக வாயில் இலங்கையில் அமையும்

(கொழும்பு)

இலங்கையின் இறக்குமதி, ஏற்றுமதி செயற்பாடுகளை அபிவிருத்தி செய்யும் வகையில் தேசிய இ- வர்த்தக வாயில் ஒன்றை அமைக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அமெரிக்கஜெனரல்எலக்ரோனிக்ஸ் ருளோபல்எக்ஸ்சேஞ்ச் நிறுவனம், பி.சி. கம்பியூட்டர்ஸ் நிறுவனம், வர்த்தக நுகர்வோர்விவகார அமைச்சு ஆகியன இணைந்து இதன் செயற்பாடுகளை முன்னெடுக்கவுள்ளன.

துறைமுகம், சுங்கம், கொள்கலன் இடமாற்று, கப்பற் சேவை ஆகியவற்றின் மையமாக ஆசியாவில் இலங்கையை உருவாக்கும்முயற்சியின் முதற் கட்டமாக இது அமைகிறது.

இ- சேர்விஸ் லங்கா லிமிடட் என்ற பெயரில் இலங்கையில் உருவாகும் முதலாவது கம்பனி இதுவாகும்.

(உ-3)

# குண்டாந்தடித் தாக்குதல் கண்டிக்கிறார் மகிந்த

(கொழும்பு)

அலரி மாளிகைக்கு மகஜர் கையளிப்பதற்கு ஊர்வலமாக வந்த மாகாண சபைகளின் முதலமைச்சர்கள் உறுப்பினர்கள் மீது பொலிஸார் தாக்கியதை கண்டித்து எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார்.

பிரதமரிடம் மகஜர் சமர்ப்பிப்பதற்கு வந்தவர்களை பொலிஸார் குண்டாந் தடியால் தாக்கியமை வெட்கக் கேடானது.

மக்களின் பிரதிநிதிகள் இவ்வாறு நடத்தப்பட்டால் பொதுமக்களை பொலிஸார் எவ்வாறு நடத்துவர் என்பதை புரிந்துகொள்ள முடியும். மாகாண சபைகளின் நிதிகளை வெட்டிக் குறைப்பதன் மூலம் அபிவிருத்திப் பணிகள் பாதிக்கப்படுவதுடன், ஊழியர்களின் சம்பளக் கொடுப்பனவுகளும் செய்ய முடியாத நிலை ஏற்படும்.

அரசாங்கம் பொறுப்புடன் செயலாற்ற வேண்டும். இது குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(உ)

# இலங்கை ஒலிபரப்பு கூ. தா. நட்டத்தில் இயங்க பொ. ஐ. மு. காரணம்

(கொழும்பு)

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்திலேயே நட்டத்தில் இயங்க வேண்டி வந்தது என ஐக்கிய தேசிய கட்சியின் தொடர்பு சாதனப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஊடக அமைச்சரான பிரியதர்ஷன யாப்பாவின் அறிக்கை தொடர்பாக ஐக்கிய தேசிய கட்சியின் ஊடகப் பேச்சாளர் விடுத்துள்ள பதில் அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

1994 ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனம் வருடமொன்றுக்கு 5 கோடி ரூபாவுக்கும் அதிகமான வருமானத்தை ஈட்டி வந்துள்ளதுடன், 8 கோடி ரூபா நிரந்தர வைப்புத் தொகையாகவும் இருந்துள்ளது.

ஆனால், பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக்காலத்தில் அதற்கு நேர்மாறாக அது 15 கோடி ரூபா நஷ்டத்தில் இயங்கி வந்துள்ளது எனவும் அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (உ-8)

# இலங்கை, பாக். ஒப்பந்தம் வரைபுக்கு அங்கீகாரம்

## அமைச்சரவை வழங்கியது

(கொழும்பு)

இலங்கைக்கும் பாகிஸ்தானுக்குமிடையில் செய்து கொள்ளப்படவிருக்கும் சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தின் வரையறைகள் பற்றிய ஒப்பந்தம், ஒகஸ்ட் மாதத்தில் பாகிஸ்தான் ஜனாதிபதி பெர்வேஸ் முஷாரப் இலங்கை வரும் போது ஒப்பமிடப்படவுள்ளது. ஒப்பந்தத்தின் வரைவு இப்பொழுதுஇலங்கை அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

கடந்தபுதனன்று முடிவு செய்யப்பட்ட இவ்வொப்பந்த வரைபை இலங்கை சார்பில் வர்த்தக, நுகர்வோர் விவகார அமைச்சர் ரவி கருணாநாயக்க தலைமையிலான குழுவும், பாகிஸ்தான் வர்த்தக அமைச்சர் அப்துல் ரசாக்தாவூத்தலைமையிலான குழுவும்முடிவுசெய்திருந்தன.

இவ்வொப்பந்தம் தொடர்பாக இதுவரை முடிவுசெய்யப்படாத விடயங்கள் பற்றி முடிவுசெய்வதற்கென அமைச்சர் ரவி கருணாநாயக்க இம் மாத முடிவில் பாகிஸ்தான் செல்வது என்றும், அதற்கு முன்பே இலங்கையின் தொழில் நுட்பவிபரக் குழு பாகிஸ்தான்செல்லு மென்றும் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இலங்கைத் தேயிலையை பாகிஸ்தானுக்கு ஏற்றுமதி செய்யும் போது ஏற்றுமதி தீர்வைகள் அகற்றப்படும் வருகிற மாதம் இலங்கை வரவுள்ள பாகிஸ்தான்ஜனாதிபதி இவ் ஒப்பந்தத்தில் ஒப்பமிடும் வகையில்ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. (உ-8)

# இன்று தேர்

(ஈச்சமோட்டை)

வட்டுக்கோட்டை ஸ்ரீ கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலய தேர், தீர்த்த உற்சவங்கள் முறையே இன்றும், நாளையும் நடைபெறவுள்ளது.

(உ-8)

# முன்பள்ளி ஆசிரியர் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வலி.கிழக்கு முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று எதிர் வரும் 18 ஆம் திகதி வியாழக்கிழமை நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது. (ஷ)

# ஆங்கில எழுத்தறிவுப் பயிற்சி

(ஊர்காவற்றுறை)

யா/வேலணை மேற்கு நடராஜ வித்தியாலயத்தில் சமூகக்கற்கை நிலையத்தினால் ஆங்கில எழுத்தறிவு பயிற்சி இலவசமாக நடத்தப்படவுள்ளது.

ஆறு மாத காலம் நடைபெறவுள்ள இப்பயிற்சியை ஆர்வமுள்ள எவரும் பயில முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஷ-75)

# இராசி பலன்

14-7-2002
(ஆனி 30 ,ஞாயிறு)
சதுர்த்தி மு. ப9.23 வரை
பூரம் பி.இ.4.23 வரை
ராகுகாலம்-4.30-6.00
நல்ல நேரம்-9.00-10.30
சித்தாமிர்தம் இரவு
நடேசர் அபிஷேகம்.

**மேடம்**
சிறு வியாதி, குடும்பக்கலகம், அதிக பிரயாசை, வியாபாரநன்மை.

**இடபம்**
சகோதரர் உதவி, உஷ்ண ரோகம், முயற்சி தாமதம், தாய்வழி உறவு.

**மிதுனம்**
காரிய நன்மை, பிரயாண சுகம், தனவரவு, சுவாரஸ்யம்.

**கடகம்**
தேவையற்ற வாக்குவாதம், வேலைக் கஷ்டம், போசன சுகம், பொருள் விரயம்.

**சிங்கம்**
தெய்வ தரிசனம், முயற்சி கைகூடும், போசனசுகம், ஆரோக்கியம்.

**கன்னி**
காரிய அலைச்சல், உறவினர் வெறுப்பு, தொழில் கஷ்டம், சயனசுகக் குறைவு.

**துலாம்**
கௌரவம், காரிய அனுகூலம், தொழில் லாபம், தெய்வ தரிசனம்.

**விருச்சிகம்**
அதிகாரம், செய்தொழில் நன்மை, உறவினர் சந்திப்பு, காரியம் நிறைவேறும்.

**தனுசு**
உடல் நலக் குறைவு, புதிய தொழில் சிந்தை, பிரயாணம், கல்வியால் நன்மை.

**மகரம்**
தர்மம், தொழில்நன்மை, நண்பர்கள் மனஸ்தாபம், முயற்சி தாமதம்.

**கும்பம்**
சுவாரஸ்யம், முயற்சி கைகூடும், பெரியோர் சந்திப்பு, வாகன சுகம்.

**மீனம்**
சத்துரு ஜெயம், மன மகிழ்ச்சி, தொழில் விருத்தி, நன்மையான சம்பவம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

**வளவன்**

# இன்று ஒரு தகவல்

## மாமியார் மகிமை

மாமியாருக்கும் மருமகளுக்கும் கருத்து வேறுபாடு வருவதற்கு என்ன காரணம் என்று நினைக்கிறீர்கள்? அது ஒரு விதமான மனோதத்துவ பாதிப்புத்தான், வேறு ஒன்றுமில்லை. அதை மனோதத்துவ ரீதியாகவே சரி செய்வதற்கு நமது முன்னோர்கள் சில பழக்க வழக்கங்களைச் சம்பிரதாயமாகவேஏற்படுத்தி வைத்திருந்தார்கள். அதாவது முற்காலத்திலே மாமியார் தான் மருமகளுக்குத் தலை வாரிப் பின்னிவிடவேண்டும் என்று ஒரு வழக்கத்தை வைத்திருந்தார்கள. இதுஎதற்காக? அந்தச்சின்னப்பெண் அவளின் அப்பா,அம்மாவை விட்டு விட்டு புதிதாக ஓர்இடத்துக்கு வந்துசேர்ந்திருக்கிறது. அதன் மனதில் உள்ள இறுக்கம் குறையவேண்டும். மனது இலகுவானதாக வேண்டும். என்பதற்காகத்தான். ஒரு குழந்தையை மடியில் போட்டுக்கொண்டு அதன் தலையைவருடினால் அது அப்படியேசொக்கிப் போய்விடும். அது போலத்தான் இதுவும்.

மாமியார், தலையைக் கோதி விடுவதும், வருடிவிடுவதும், சடைபின்னிவிடுவதும் மருமகளுக்கு இதமாக இருக்கும். இரண்டுபேருக்கும்இடையில் உள்ள மன இடைவெளி குறையும். ஒரு புரிந்துணர்வு ஏற்படும். இதற்காகத்தான் அந்தப்பழக்கம். இருந்தாலும் இந்தக் காலத்தில் அது சாத்தியமா? என்பது யோசிக்க வேண்டிய விஷயம் ஏனென்றால் நான் கூட புதிதாகக் கல்யாணமான பெண்ணிடம் இந்தஆலோசனையைச்சொல்லிப்பார்த்தேன். 'நீங்கள் சொல்வதுசரி சார்! அதைநான் மறுக்கவில்லை. என் தலையை என்னுடைய மாமியிடம் கொடுப்பதற்கு நான் தயாராயிருக்கிறேன். அவர் அதைநீங்கள் சொல்வது போல் கோதி விட்டால்பரவாயில்லை. அதற்குப் பதிலாக மோதிவிட்டால் என்ன செய்வது என்று கேட்டாள் அந்தப் பெண். முன் ஜாக்கிரதையாகச் சுவரில்ஒரு தலையணையை வைத்துக் கொள்ள வேண்டியது தான். வேறு என்ன செய்வது?

இந்தப் பிரச்சினை இந்தக் காலத்தில் மட்டும் தான்என்று இல்லை அந்தக்காலத்திலும இருந்திருக்கிறது. வெகுகாலத்திற்கு முன்னர் ஒரு ஆள இருந்தான் அவன் மனைவி ஒரு கோடுகிழித்தால் அதைத் தாண்டவே மாட்டான். அப்படியான பதிவிரதன்.

அந்த அம்மாவுக்கு மாமியார் ஒரு பெரிய பிரச்சினை, இந்தக் கிழவியை எப்படி அப்புறப்படுத்துவது என்று யோசித்தாள் அந்த அம்மா, ஒரு யோசனை செய்து வீட்டுக் காரரைக் கூப்பிட்டார். அந்தஆள்எப்போதுஎப்போது என்று காத்துக்கொண்டிருக்கிறானே. அந்த அம்மா கூப்பிடுவதற்கு முன்னரே ஏன் என்று கேட்டுக் கொண்டே ஓடிவந்து நின்றான், 'இதோ பாருங்கள்' நீங்கள் உங்கள் அம்மாவை அழைத்துக் கொண்டு போய் எங்கேயாவது நடுக்காட்டில் விட்டு விட்டு வந்து விடுங்கள். அது தான் நல்லது என்றாள். சரி என்று இவனும் ஒத்துக் கொண்டான். வேறு ஒன்றும் சொல்லமுடியாதே!

எங்கேயோ ஊருக்கு அழைத்துக் கொண்டு போவது போல ஓர் ஏற்பாடு பண்ணிவிட்டான், இரண்டுபேரும் கிளம்பினார்கள். இந்த மருமகள் பெண் இரண்டுபேருக்கும் இரண்டு கட்டுச் சோறுப் பொதிகளைக் கட்டிக்கொடுத்தாள், கணவனுக்குக் கொடுத்த பொதியினுள் பால் சோறு இருந்தது. மாமியாருக்குக் கொடுத்த பொதியினுள் களிமண்ணை வைத்துக் கொடுத்தாள். இதனைத் தெரியாமல் அவர்கள் வாங்கிக் கொண்டு புறப்பட்டு ஒரு நடுக்காட்டுக்கு வந்து சேர்ந்தார்கள்.

ஒரு குளக்கரை, நீ இங்கே சாப்பிட்டுக்கொண்டிரு நான் அந்தப் பக்கம் போய் விட்டு வருகிறேன் என்று சொல்லிவிட்டு கைதவறுதலாக அம்மாவுக்குக் கொடுத்த பொதியை எடுத்துக் கொண்டு கிளம்பிவிட்டான். அவன் திரும்பிவரவேயில்லை. இந்த வயதான அம்மா மகனைக் காணவில்லையே என்று அழ ஆரம்பித்து விட்டாள். அப்போது அந்தப் பக்கமாக ஒரு தெய்வ கன்னிகை நீராடுவதற்காக வந்திருக்கிறாள், அவள் ஏன் அம்மா அழுகிறீர்கள்? என்று கேட்டாள், இந்த அம்மாவிஷயத்தைச் சொன்னார். சரி கவலைப்படாதே என்று ஆறுதல் சொல்லியது அந்தத் தெய்வகன்னிகை.

கட்டுச் சோற்றுப் பொதியைப்பிரித்து இரண்டுபேரும் சாப்பிட்டார்கள். அந்தத் தெய்வ கன்னிகைக்கு மிகுந்த சந்தோஷம், உடனே அந்த அம்மாவுக்கு ஒரு வரம் கொடுத்தது. அந்த வயதான அம்மா ஓர் இளமங்கையாக மாறிவிட்டார். நிறைய நகை துணி மணியெல்லாம் கொடுத்து வீட்டுக்கு போகும் வழியையும் அந்தத் தேவகன்னிகை காட்டியது. உடனே இவர் வீட்டுக்கு வந்து சேர்ந்து என்ன நடந்தது என்ற விவரத்தையும் சொன்னார்.

மகனுக்கு உண்மையாகவே உள்ளுக்குள் சந்தோஷம். மருமகளுக்கு பொறாமை, மறுபடியும் வந்துவிட்டாளே அதுவும் இவ்வளவு அழகாக என்று சொல்லி ஏகக்கடுப்பு உடனே அந்தப்பெண் யோசித்துப் பார்த்தாள் அவளுடைய மூளை இப்படி வேலைசெய்ய ஆரம்பித்தது.

'' களிமண் பொதியைக் கொடுத்தனிப்பினால் கிழவியைக் குமரியாக மாற்றி விடலாம் போலிருக்கிறதே, நமது அம்மாமையும் அதே போல் அனுப்பினால் என்ன?'' என்று யோசித்து அப்படியே செய்தாள், மருமகனும் அவனுடைய மாமியாரும் இப்போது காட்டுக்கு போகிறார்கள், அந்த அம்மா கையில் களிமண்பொதி, பழைய மாதிரியே இவன்அவரையும் குளற்றங்கரையில் விட்டுவிட்டு வந்துவிட்டான் இந்த தடவை பொதி மாறவில்லைஇவன்வந்து தூரத்தில் மறைந்து நின்றுகொண்டான், தெய்வகன்னிகைவந்தது. இந்த அம்மா வா, சாப்பிடுவோம் என்று சொல்லிச் சாப்பிடக் கூப்பிட்டார்.

இருவரும் உட்கார்ந்து பொதியைப் பிரித்தால்... உள்ளே களிமண் தெய்வ கன்னிகைக்கு கோபம்வந்துவிட்டது. உடனே '' நீ கழுதையாகப்போகக்கடவது'' என்று சாபம் கொடுத்துவிட்டுப் போய்விட்டது. உடனேஅந்த மாமியார் எழுந்து நின்றார். காலைப்பார்த்தால் அதுகுளம்பாக மாறியிருந்தது. கழுதைக் கால் மாதிரி, அவர்வீட்டுக்கு வர வர உடம்பு கொஞ்சங் கொஞ்சமாகக் கழுதையாக மாறிப்போய்விட்டது.

வீட்டுவாசலில் சழுதைச் சத்தம்கேட்டுவிட்டு உள்ளே இருந்தஅந்தப்பெண்ஓடிவந்து பார்த்தாள், கணவன் ஒரு பக்கம். கழுதை ஒரு பக்கம் நின்றுகொண்டிருக்கிறார்கள் என்ன ஆனது என்று விசாரித்தாள், அதற்கு அவன் ''வர வர மாமியார் கழுதைமாதிரி

(3-ம் பக்கம் பார்க்க)

### ஆடம்பரக்கார் இறக்குமதி விவகாரம்

# ஜனாதிபதி மீது அரசியற்குற்றச்சாட்டு

# இதை நாடாளுமன்றமேதீர்மானிக்கும்

## செய்தியாளர்களிடம் ஜீ.எல்.பீரிஸ்

(கொழும்பு)

2ஆயிரத்து460 மில்லியன் பெறுமதியில் 49 ஆடம்பர வாகனங்களை உரியஅங்கீகாரமின்றி இறக்குமதி செய்தமை தொடர்பாக ஜனாதிபதி மீது அரசியற் குற்றச்சாட்டு கொண்டுவரப்படவேண்டுமா என்பதை நாடாளுமன்றமே தீர்மானிக்கும் என்று செய்தியாளர் மத்தியில் அரசாங்கப் பேச்சாளர் ஜீ.எல் பீரிஸ் வியாழனன்று தெரிவித்தார்.

இது தொடர்பாக அரசியற் குற்றச்சாட்டிற்கு போதிய ஆதாரம் இல்லை என்றும் இவ்விவகாரம் கைவிடப்பட்டுவிட்டது என்றும் ஜனாதிபதி மாளிகையில் இருந்து வெளியிடப்பட்ட அறிக்கை பற்றி கருத்துத் தெரிவித்த போதே ஜீ.எல் பீரிஸ் இவ்வாறு தெரிவித்தார்:

மேலும் கூறுகையில், இதற்கு முன்னரும் இவ்வாறு தான், ஜனாதிபதி ஒருதலைப் பட்சமாக விடயம் கைவிடப்பட்டதாக அறிவித்தார். ஆனால் அவர் நாடாளுமன்றத்திற்கு பதில் கூறவேண்டும்.

செலவு செய்யப்பட்ட 2ஆயிரத்து 460 மில்லியனில் 63 மில்லியனுக்கு மட்டுமே அமைச்சரவை அங்கீகாரம் அளித்திருந்தது.

அது மட்டுமன்றி கொரியாவின் டிவூகோப்பரேஷன் அன்பளிப்பாக வழங்கிய 5 வாகனங்களுக்கும் அவர்பொறுப்பு கூற வேண்டும்என்றும் ஜீ.எல் பீரிஸ் தெரிவித்தார். (உ)

### ஆசிரியர் பதவி

## போலிஆவணம்சமர்ப்பித்த பெண் விளக்கமறியலில்

(கொழும்பு)

உதவி ஆசிரியர் பதவிக்கு போலி ஆவணங்களை சமர்ப்பித்த யுவதி ஒருவர் இரத்தினபுரி பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இரத்தினபுரியைச் சேர்ந்த டி.கே. பிரேஸிலா என்ற யுவதியே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இவரை இரத்தினபுரி மாவட்ட நீதிபதி பண்டார போயாகொட முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட போது, நீதிபதி 27 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (உ-3)

### திருட்டுப் போன

## பொருட்களை அடையாளம் காட்டிப் பெறலாம்

(யாழ்ப்பாணம்)

பொதுமக்களிடம் இருந்து திருடப்பட்ட பொருட்கள் பலவும், பொலிஸாரினால் மீட்கப்பட்டு யாழ். பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளன.

சுன்னாகம், மானிப்பாய் பகுதிகளில் இருந்து மீட்கப்பட்ட நீரிறைக்கும் மோட்டார்-3, ஆண்களுக்கான துவிச்சக்கர வண்டி-5 கோண்டாவில் பகுதியில் மீட்கப்பட்ட டெக் ஆகியன இதில் அடங்கும்.

மேற்படி பொருட்களை அவற்றின் உரிமையாளர்கள் ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ள முடியும் எனயாழ். குற்றத்தடுப்புப் பிரிவு சப் இன்ஸ்பெக்டர் பெர்னாண்டோஅறிவித்துள்ளார். (உ-19-6)

### கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

சங்கானை, சண்டிலிப்பாய், உடுவில், தெல்லிப்பழை ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளுக்கு உட்பட்ட விறகுகாலை, அரிவுகாலை உரிமையாளர்கள் மரத் தரகர்கள் ஆகியோருக்கான கலந்துரையாடல் இன்று பி.ப. 3.00 மணிக்கு சண்டிலிப்பாய் ஐயனார் வீதியிலுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. (உ)

### புத்தக கண்காட்சி நெல்லியடியில்

(யாழ்ப்பாணம்)

எம்.டி. குணசேனவின் புத்தகக்கண்காட்சியும் விற்பனையும் நேற்று முன்தினம் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மண்டபத்தில் ஆரம்பமாகியுள்ளது.

இக்கண்காட்சி நாளைவரை அங்கு நடைபெறவுள்ளது குறிப்பிடத்தக்கது. (உ-3)

### சாகஸ நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

பெண்கள அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனத்தினால் பராமரிக்கப்படும் ஆதரவற்ற, பாதிக்கப்பட்ட பெண்கள் மற்றும் சிறுவர்களின் வளர்ச்சி நிதிக்காக யாழ். தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்களின் ஆதரவில் இன்று முதல் 4 தினங்கள் மு.ப.10.00மணி தொடக்கம் யாழ். தொழில் நுட்பக் கல்லூரி மைதானத்தில் சாகஸ நிகழ்வு இடம்பெறவுள்ளது. (உ)

### விபத்தில் ஆசிரியர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

சைக்கிள்-ஓட்டோ விபத்தில் படுகாயமடைந்த ஆசிரியர் யாழ். போதனாவைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் முற்பகல் 11.00 மணியளவில் ஒட்டுமடம் பகுதியில் இடம்பெற்ற இவ்விபத்தில் புனித சென் ஜேம்ஸ் மகளிர் பாடசாலை ஆசிரியரான பீ. அன்ரனி இருபராஜ் வயது (24) என்பவரே காயமடைந்தவராவார். (ஷ-6)

### சென்பீற்றர்ஸ்

## நினைவுத் தூபியில் தென்பகுதி மக்கள் அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

1995ஆம் ஆண்டு ஜூலை 9ம்திகதிநவாலிசென்பீற்றர்ஸ் தேவாலயம் மீது இலங்கை வான்படையினர் மேற்கொண்ட தாக்குதலில்பள்ளிச் சிறுவர்களும், பொதுமக்களும் கொடூரமாக படுகொலை செய்யப்பட்டதன் நினைவாக கடந்த 9ஆந் திகதி அந்த இடத்தில் நினைவுத்தூபி திறந்து வைக்கப்பட்டது.

இந்த நினைவுத் தூபிக்கு அண்மையில்கியூடெக் நிறுவன ஏற்பாட்டில் வருகை தந்த தென்னிலங்கை மக்கள் மின் உபகரணங்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.

நாம் என்றும் இனபேதங்களைக் கடந்து மனிதத்தை நேசிக்க கடமைப்பட்டவர்கள் எனவும் தூபியில் அஞ்சலி செலுத்திய மக்கள் தெரிவித்தனர். (ஷ- 6)

### தினசரி தியானம்

## சத்திய தேவதை

புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை
வாய்மையால் காணப்படும்.

-திருக்குறள்

சத்தியதேவதையின் ஆட்சியிலிருப்பது நல்வாழ்வு அதற்குச் செங்கோலாயிருப்பது சாந்தம். அதற்குச் சிம்மாசனமாயிருப்பது மாந்தர் உள்ளம்.

இரண்டுவித அரசர்கள் நமது உள்ளத்தை ஆள முயலுகிறார்கள், ஒருவன் கொடுங்கோல் வேந்தன், பொய்யன். காமமும், குரோதமும், போராட்டமும் அவனது செயல். மற்றொருவன் செங்கோல் வேந்தன்; சத்திய சொரூபி, தூய்மையும், அன்பும் அமைதியும், அடக்கமும் அவனது செயல். இவ்விருவருள் யாரை நாம் மனத்தகத்து வீற்றிருக்கச் செய்வது? சத்திய வேந்தன் சித்தமிசை குடிகொள்ள இடம் கொடுப்போமானால் நாம் பாக்கியவான்கள் ஆவோம்.

- ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்.

# கல்விப் போதனைகளாக மட்டும் மனித உரிமைகள் இருக்க கூடாது

## வவு மாவட்ட நீதிவான் எம்.இளஞ்செழியன்

(வவுனியா)

நமது நாட்டின் அரசியல் அமைப்புச் சட்டத்தில் மனித உரிமைகள் ஏற்பாடுகள் இருக்கின்ற போதிலும்வாழ்க்கைச் சுதந்திரம் உள்ளடக்கப்படாதது பெரும் குறைபாடாக உள்ளது என வவுனியா மாவட்ட நீதிவான்எம்.இளஞ்செழியன் தெரிவித்துள்ளார்.

கொழும்பு பல்கலைக்கழக மனித உரிமைகள் நிலையத்தின் அனுசரணையுடன் வவுனியா மாவட்ட சைவப் பிரகாச வித்தியாலயத்தில் நேற்றுமுன்தினம்நடைபெற்ற மனித உரிமைகள் தொடர்பான கருத்தரங்கில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நமதுநாட்டில்மனிதஉரிமைகள் தொடர்பான எழுச்சிகள் யாவும் யுத்தம்காரணமாகவே ஏற்பட்டன.

சட்டம் தூங்கும் போது அராஜகம் தலை தூக்குவதனாலேயே மனித உரிமை மீறல்கள் உயிர்ச்சேதங்கள் ஏற்படுகின்றன.

மனித உரிமைகள் என்பது ஒரு கல்விப் போதனையாக மட்டும் அமைந்து விடக்கூடாது அவற்றைநடைமுறையில் சாதிப்பவர்களே மனித உரிமை வ'திகளாவார்கள் என்றும் அவர் அங்கு தெரிவித்துள்ளார். (உ-8)

# யானையைக் கொன்ற விவசாயிக்கு அபராதம்

(கொழும்பு)

வீட்டுத் தோட்டத்திற்கு வந்து மரவள்ளிப் பயிர்களை உட்கொண்ட யானையை சுட்டுக் கொன்றவருக்குஒருஇலட்சத்து 25 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் கல்கமுவ கொக்காவெ இடத்தில் இடம் பெற்றுள்ளது.

இச்சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு சுற்றாடல் இயற்கை வளப் பிரதி அமைச்சர்இந்திகபண்டாரநாயக்கா, வனவிலங்கு அதிகாரிகள், பொலிஸார் விஜயம்செய்து சுட்ட விவசாயியைஇனங்கண்டுஅபராதம் விதித்துள்ளனர்.

யானையைக் கொன்றதற்காக ஒருலட்சம்ரூபாவும், துப்பாக்கியைப் பயன்படுத்தியமைக்காக25 ஆயிரம் ரூபாவும் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. (உ-3)

# வட மாகாணத்தில் குறுகியகால பயன்தரு திட்டங்கள் அமுலாகும்

(கொழும்பு)

வடமாகாண அகதிகளின் நலன்களைகருத்தில் கொண்டு வன்னிமாவட்ட புனர்வாழ்வு அமைச்சு குறுகியகால பயன்தருதிட்டங்கள் பலவற்றை இவ்வாண்டில் நடைமுறைப் படுத்தவுள்ளது.

இதுதொடர்பான ஆலோசனைக் கூட்டமொன்று வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் கே கணேஷ்தலைமையில் விரைவில் நடைபெறவுள்ளதாக அமைச்சின் செயலாளர் தர்மகுலசிங்கம் தெரிவித்துள்ளார்

இந்தக்கூட்டத்தில் பிரதேச செயலாளர் மற்றும்உள்ளூர் திணைக்களத் தலைவர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

குறுகியகாலத்தில்பயனளிக்கும் திட்டங்கள்தொடர்பான அறிக்கைகள், சம்பந்தப்பட்ட அதிகாரிகள்மூலம் கோரப்படவுள்ளதாக அமைச்சர் நூர்டீன்மசூர் தெவித்துள்ளர். (உ-8)

# பிரதமர் மல்வத்தபீடாதிபதி அரை மணி நேரம் அந்தரங்க உரையாடல்

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனது அமெரிக்க விஜயத்தையொட்டி கடந்த வியாழக்கிழமை மல்வத்த பீடமாநாயக்க தேரர் ரம்புக்வெல்ல ஸ்ரீவிபஸ்லி தேரோவைச் சந்தித்து ஆசீர்வாதம் பெற்றுக்கொண்டார்.

இச்சந்திப்பின்போது சுமார் அரை மணித்தியாலம அந்தரங்கமாக உரையாடியுள்ளதாகவும்;

இதன் போது, ஊடகவியலாளர்கள் எவரையும் கலந்துகொள்ள அனுமதிக்கப்படவில்லை.

இறுதி 5 நிமிட நேர கலந்துரையாடலின் போதே ஊடகவியலாளர்கள் அனுமதிக்கப்பட்டனர். (உ-3)

### சமாதானத்தை வெளிப்படுத்தும்

# கையெழுத்து வேட்டைக்கு மக்கள் பெரும் ஆதரவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மக்களின்சமாதானவிருப்பத்தைஎகோபித்த முறையில் தென்னிலங்கை மக்களுக்குத் தெரிவிக்கும் வகையில் 2 இலட்சம் பேரின் கையொப்பங்களைப் பெறும் நடவடிக்கை முதற்கட்டமாக வடமராட்சியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வடமராட்சிப் பகுதியிலுள்ள அரச திணைக்களங்கள், தனியார் நிறுவனங்கள் பொது அமைப்புகள் போன்றவற்றில் இதற்கான கோவைகள்வழங்கப்பட்டுள்ளதாகவும்

இதற்கான ஆதரவு பொது மக்கள் மத்தியில் பெருகி வருவதாகவும்,

'' சமாதானமும் சுதந்திரமும் எமக்குத்தேவை'' என்ற தலைப்பில் கையெழுத்து இயக்கத்தை ஆரம்பித்துள்ள ஐக்கிய சோஷலிசக்கட்சியின் யாழ். மாவட்ட செயலாளர் க. தேவதாசன் தெரிவித்தார் (ஷ-106)

# வை. கோ. கைது தமிழரிடையே மிகுந்தவிசனத்தை ஏற்படுத்தியுள்ளது

## த. வி. கூ. செயலாளர் அறிக்கை

(கொழும்பு)

இலங்கைத் தமிழர்கள் சார்பாக வை கோ. தொடர்ந்து குரல் எழுப்பி வந்திருப்பது மாத்திரமல்லாமல் தமிழ்த் தேசிய இனப் பிரச்சினைக்கு நீதியானதும், நிரந்தரமானதுமான அரசியல்தீர்வுகாணப்படவேண்டுமென்பதையும் வலியுறுத்தி வந்துள்ளார்.

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழக பொதுச்செயலாளர்வை. கோபாலசாமியின் கைதையடுத்து த.வி கூ. செயலாளர் நாயகம்இரா.சம்பந்தன் வெளியிட்டுள்ள பத்திரிகை அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

ம. தி. மு. க.வின் பொதுச் செயலாளரும்தமிழ் நாட்டின் பிரபல அரசியல் தலைவர்களில் ஒரு வருமானவை. கோ. கைது சம்பந்தமாக இலங்கையில் உள்ள தமிழ்க்கட்சிகளின் கூட்டமைப்பு அதிர்ச்சியையும் ஆழ்ந்த மனவேதனையையும் தெரிவிக்கிறது.

இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழ்ஈழவிடுதலைப் புலிகளுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்டிருக்கும் யுத்த நிறுத்த ஒப்பந்தம் காரணமாக ஆயுத மோதல் நிறுத்தப்பட்டிருப்பதுடன்ஒரு மூன்றாம் தரப்பு சர்வதேச அனுசரணையுடன் ஒரு சமாதான தீர்வை ஏற்படுத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

இந்தியா உட்பட சர்வதேச சமூகம் இந்த சமாதானமுயற்சிகளுக்கு தமது பூரண ஆதரவை வழங்கி வருகின்றது. அத்துடன் இனவேறுபாடுகளுக்கு அப்பால் இலங்கையில் உள்ள பெரும்பாலான மக்கள் இந்த முயற்சிகளுக்கு தங்கள் பூரண ஒத்துழைப்பை வழங்கி வருகின்றனர்.

இந்த சூழ்நிலையில் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு ஆதரவு வழங்குகின்றார் என்ற காரணத்திற்காக வை. கோ. கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருப்பது இலங்கை வாழ் தமிழ் மக்களுக்கு மிகுந்த விஷனத்தை ஏற்படுத்தியுள்ளது.

கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருக்கும் திரு.வை.கோவையும் ஏனையோரையும்உடனடியாக விடுதலைசெய்வதற்கு விரைவான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இந்திய மத்திய அரசாங்கத்தையும் தமிழ் நாடுமாநிலஅரசாங்கத்தையும் நாம் வேண்டுகின்றோம்.

இத்தகைய நடவடிக்கை இலங்கையில் மேற்கொள்ளப்படும் சமாதானதீர்வு முயற்சிகளுக்கான ஓர் அங்கீகாரமாக அமையும் என்றுள்ளது. (ஷ)

# பாக். பாராளுமன்ற தேர்தல் அடுத்த மாதம் 10ஆம் திகதி

## அதிபர் முஷாரப் அறிவிப்பு

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் பாராளுமன்றத் தேர்தல்கள் அடுத்தமாதம் 10ஆம் திகதிநடைபெறும் என அந்நாட்டு ஜனாதிபதி பர்வேஷ்முஷாரப் அறிவித்துள்ளார்.

பாகிஸ்தானின் தேசிய அசெம்பிளி, மாகாணசபைகள், செனட் ஆகியவற்றுக்கான தேர்தல்களே நடைபெறவுள்ளன. இதற்கான உத்தரவுகடந்த புதன்கிழமை நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் வழங்கப்பட்டது.

பிரதமர் பதவிக்கோ அல்லது ஆளுநர் பதவிக்கோ மூன்றாவது தடவையாக எவரும் போட்டியிட முடியாது என முஷாரப் அறிவித்துள்ளமையால் முன்னாள் பிரதமர்களான ஷரீப்மற்றும் பெனாஷிர் பூட்டோ ஆகியோர் அடுத்த தேர்தலில் போட்டியிடும் வாய்ப்பை இழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-3)

### நிரந்தர குற்றவியல்

# நீதிமன்ற விசாரணைகளில் இருந்து அமெரிக்க வீரர்களுக்கு விதிவிலக்கு

(இலண்டன்)

உலகின் முதலாவது நிரந்தர குற்றவியல் நீதிமன்ற விசாரணைகளில் இருந்து அமெரிக்க வீரர்களுக்கு விதிவிலக்கு அளிப்பதென ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபை தீர்மானித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் அமைதி காக்கும் படையின்பணிகளை அமெரிக்கா வீட்டோ தடுப்பு அதிகாரம் மூலம் தடை செய்யாமல் பாதுகாப்பதற்காகவும்,

அமெரிக்க வீரர்களுக்கு உலக நீதிமன்றத்தின் விசாரணைகளிலிருந்து விதிவிலக்கு அளிக்கவேண்டுமென அமெரிக்கா வலியுறுத்தி வந்ததை தொடர்ந்தும் நேற்று முன்தினம் சபையில்இத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

இது தொடர்பாக காரசாரமாக நடைபெற்ற 15 நாடுகளின் விவாதங்களை அடுத்து விருப்பமின்றி இந்த விதிவிலக்கு தீர்மானத்தை எடுத்திருப்பதாகவும்தெரியவந்துள்ளது.

உலக நீதிமன்றத்தின் கருத்துக்களை ஆதரிக்காத நாடுகளை சேர்ந்த அமைதிகாக்கும் படைவீரர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் குறித்து ஒருவருடகாலத்துக்கு விசாரணைசெய்யவோ அல்லது வழக்குத் தொடரவோ முடியாது எனவும் அங்கு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. (உ-8)

# புலிகளுக்கு அளித்து வரும் ஆதரவு தொடரும்

## ம. தி. மு. க பிரமுகர்கண்ணப்பன் தெரிவிப்பு

(சென்னை)

எத்தகைய தடைகள்வந்தாலும் புலிகளுக்கு நாம்அளித்து வரும் ஆதரவுதொடருமென, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழகத்தின் சிரேஷ்ட பிரமுகரும் மத்திய அமைச்சருமான கண்ணப்பன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை தமிழ்நாட்டின் சிற்சில இடங்களில்ம.தி.மு.கதொண்டர்கள் தமதுகட்சிப் பொதுச் செயலர் வை. கோபாலசாமி கைது செய்யப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அமைதியான முறையில் போராட்டம் செய்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும். (ஷ-19)

### போடோ சட்ட வழக்குகளை விசாரிக்க

# ஆறு நீதிமன்றங்களுக்கு உயர்நீதிமன்றம் அனுமதி

(புதுடில்லி)

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தமிழ் நாட்டில் பதிவாகும் வழக்குகளை விசாரணை செய்வதற்கான அனுமதியை ஆறு நீதிமன்றங்களுக்கு சென்னை உயர்நீதிமன்றம் வழங்கியுள்ளது.

தமிழ் நாட்டில் போடோ சட்டத்தின் கீழ் பதிவாகும் வழக்குகளை தமிழ் நாட்டிலேயே விசாரிக்க வழிசெய்யுமாறு சென்னை உயர் நீதிமன்றத்தை தமிழ் நாடு அரசு கேட்டுவந்தது குறிப்பிடத்தக்கது.

மதுரையில் வகுப்புக்கலவாங்களை விசாரித்து வரும் நீதிமன்றங்களும் போடோ சட்டத்தின் கீழ் பதிவாகும் வழக்குகளை விசாரிப்பதற்கு சென்னை உயர்நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது

ஷ-19)

# புதிதாக 7 கப்பல் சேவைகள்

இவ் ஆண்டின் முதல் ஆறு மாத காலத்தினுள் இலங்கை துறைமுக அதிகாரசபையினால் கொழும்பு துறைமுகத்தினூடாக புதிதாக 7 கப்பல் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

துறைமுக அபிவிருத்தி மற்றும் கப்பற்றுறை அமைச்சு இதனைத் தெரிவித்துள்ளது. (உ-3)

கெடுவல்யான் என்பது
அறிகதன் நெஞ்சம்
நடு ஓரீஇ அல்ல செயின்.
குறள்

வலம்புரி

## ஆத்திரம் வேண்டாம்!

வடக்குக் கிழக்குப் பகுதிகளில் வெகுஜனப் போராட்டங்கள், ஹர்த்தால்கள் நடத்துவதற்கு இனிமேல் அரசு ஒரு போதும் அனுமதியளிக்காதென பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகிய பின்னர் இத்தகைய வெகுஜனப் போராட்டங்களுக்கு அனுமதி வழங்கப்பட முடியாதென்பது பாதுகாப்பு அமைச்சரின் வாதம்.

யுத்த நிறுத்தம் சமாதான முயற்சி என்பவற்றின் மத்தியில் வெகுஜனப் போராட்டங்கள் நடத்தப்படுவது சமாதானத்தின் மலர்வுக்கு தடையாக அமையலாம் என்ற கருத்து ஏற்புடையதாக இருப்பினும் அத்தகைய வெகுஜனப் போராட்டங்கள், ஹர்த்தால்கள் எந்த நோக்கில் இடம்பெறுகின்றன என்பதைப் பாதுகாப்பு அமைச்சர் அறியாதது, கவலைக்குரியது.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ஏற்படுத்திவிட்டு பொது இடங்களிலிருந்து படையினர் வெளியேறாதிருந்தால், கடற்றொழிலுக்குச் செல்வதற்குத் தடைவிதித்தால், சொந்த இடங்களில் மீண்டும்மீளக் குடியமர்வதை மறுத்தால் பொதுமக்கள் மற்றும் பொது அமைப்புகளுக்கு இருக்கக்கூடிய ஒரேவழி வெகுஜனப் போராட்டங்களும், ஹர்த்தால்களுமே.

எனவே, பொதுமக்களால் மேற்கொள்ளப்படுகின்ற வெகுஜனப் போராட்டங்களுக்கு இனிமேல் அனுமதியில்லை என்று அரசு அறிவிப்பதைவிட இனிமேல் பொதுமக்கள் வெகுஜனப் போராட்டங்களைமேற்கொள்ளவேண்டிய அவசியமேயில்லை எனக்கூறுவதே சமாதான முயற்சிக்கும், நிரந்தரத் தீர்வுக்கும் வழிவகுப்பதாக இருக்கும்.

அதைவிடுத்து சமாதானப் பேச்சுவார்த்தையை விரைவுபடுத்துமாறு - வடக்குக் கிழக்கில் இயல்பு நிலையை ஏற்படுத்துமாறு வலியுறுத்தி நடத்தப்படும் அகிம்சைப் போராட்டங்களைத்தடுப்பதும் அதுகுறித்து ஆத்திரம் கொள்வதும் சமாதான முயற்சியின் அறிகுறிகள் அல்ல.

மீண்டும் தமிழ் மக்களின்வெகுஜனப் போராட்டங்களை அரசு தடுத்து நிறுத்த முற்பட்டால் அதன் விளைவு பாரதூரமாக அமையும்.

# கடின மனங்கள் வன்முறைகளை வளர்க்கின்றன

# தூய உள்ளத்தோரே கடவுளைக் காண்பர்

## பரமபிதா காட்டிய பாதை

மரியநிலக்ஷி செல்வமகள்



'முதற்கனியாகத் தேவ ஆவியைக் கொண்டுள்ள நாமும் இறைமக்களாக்கப்படும் நாளை எதிர்நோக்கி, அதாவது நம் உடல் விடுதலையாக்கப்படும் நாளை எதிர்நோக்கித் தவித்துக் கொண்டிருக்கிறோம்' (உரோ 8:23) இறைவன் 'புதியன' செய்கின்றார் என்றால் அது மனிதனின் படைப்பு சக்தியின் வழியே தான். மனிதன் இறைவனின் கரங்கள், இறைவன் படைக்கும் உயிர். இப்படியானவன் விடுதலை பெறும் நாளை ஏங்கித் தவிக்கின்றான்.

### வன்முறை உள்ளம்

வன்முறை உலகில் வாழ்ந்து கொண்டிருக்கும் நாம், எமது மனச்சாட்சியின் கண்களை மழுங்கடித்து அகப்பார்வையற்றவர்களாக வாழ்கின்றோம். கண்டும் காணாதவர்களாகச் செயல்படுகின்றோம். நமக்கென்ன? எமக்கில்லைத்தானே. எப்படிப் போனால் என்ன? என்ற அசமந்தப் போக்குள்ளவர்களாக கண்ணிருந்தும் குருடர்களாகக் காதிருந்தும் செவிடர்களாகச் செயல்படுகின்றோம். இயேசு மத்தேயு நற்செய்தி வழியாகக் கூறுகிறார் 'அவர்கள கண்டும் காண்பதில்லை. கேட்டும் கேட்பதில்லை. உணர்வதுமில்லை (மத். 13:14) என்றார். அவ்வளவு கடின மனமுள்ளவர்களாக வன்முறையால் உள்ளங்கள் மாற்றப்பட்டு விட்டன.

வன்முறைக்கு உண்மையான பதில் அன்புதான். அதன் உண்மையான நோக்கம் தீமையை எதிர்ப்பது மட்டுமே. தீமைகள் இல்லையென்றால் வன்முறை தலைதூக்க வழியில்லை. இறைவனைப் பிறரிலே அடையாளம் கண்டு கொள்வதே அன்பாகும். இதுவே இயேசு வெளிப்படுத்தியது. ஒருவரை ஒருவர் அன்பு செய்யுங்கள் என்ற அறைகூவலாகும். உண்மையான அன்புதன்னைத்தாண்டியது, அதுபிறரைநோக்கியதாக இருக்கும். இத்தகைய அன்பே பொறாமை கொள்ளாத அன்பாகும். அடுத்தவரின் சுதந்திரத்தை மதிக்கும், பிறருடைய மகிழ்ச்சியில் தானும் மகிழும்.

### உறவுப் பாலம்

நமது மனமோ தீமையை மையமாக வைத்து பகைமை பிரிவினையை வளர்க்கிறது. ஆனால் நன்மையை மையமாக வைத்து உறவைவளர்க்க சமுதாயத்தைக் கட்டி எழுப்ப நமது மனம் முன்வரவேண்டும். தீமை விளைவிக்கும் இறந்த காலத்தை விடுத்து புதியன படைக்கும் எதிர் காலத்தை நேசிக்கவேண்டும். பெருகிவரும் தீமைகள் நடுவில் பல மதங்களைச் சேர்ந்தவர்கள்கூடிவந்து ஒன்றிணைந்து உறவாடி அக்கிரமங்கள் அறியாமைகளைக் களைய முன்வரவேண்டும். அப்போதே, அமைதியை நிலைநாட்டுவது இலகுவான செயலாகும் ஒருவர் ஒருவரிலே நம்பிக்கையை வளர்ப்பதன் மூலமும், நற்செயல்களை வெளிப்படுத்துவதன் மூலமும் தோழமையை வலுப்படுத்தலாம், உறவுப் பாலத்தை உறுதிப்படுத்தலாம்.

### சுதந்திரக் காற்று

நாம் பொறுப்புள்ளவர்களாக இருக்குமட்டும் எம்மிடமுள்ள தோழமை மாறுபடாது. பொறுப்பைத் தட்டிக் கழிக்கும் எந்த எண்ணமும், செயலும் உண்மையான சுதந்திரத்தைத் தந்துவிடாது. பொறுப்பு என்பது நாமிருக்கும் நிலையிலிருந்து நாம் இருக்கவேண்டிய நிலைக்கு அழைத்துச் செல்வது. எதைச் செய்ய வேண்டுமோ அதைச் செய்ய எத்தனிப்பதில்தான் சுதந்திரம் இருக்கின்றது. யாருடைய வற்புறுத்தலுமின்றி நாமாக இயங்கி யாருக்கும் தடங்கலாகத் தடைக்கற்களாக அல்லாமல் சமுதாய நன்மையைக் கருத்திற்கொண்டு எந்தவித எதிர்பார்ப்புமின்றி எல்லோரும் செயல்படும்போது சுதந்திரக் காற்றுத் தடையின்றி வீசும். அது துர்நாற்றம் வீசுவதாக அல்லாமல் சுகந்த தென்றலாக மாறும்.

'தூய உள்ளத்தோர் கடவுளைக் காண்பர்', 'என்னைக் கண்டவன் தந்தையைக் கண்டான், தந்தையும் நானும் ஒன்றே' என்ற இயேசுவின் வார்த்தைகள் மற்றவர்களிலே இறைவனைக் காண வேண்டும். மற்றவர்களை அன்பு செய்வதன் மூலம் இறைவனை அன்பு செய்ய வேண்டும். அன்பு மயமான உலகை உருவாக்கும் ஆதாரங்களாக மாறவேண்டும். ●

---

தமிழ் உப தபால்

## அதிபர்கள் கோரிக்கை

(கொழும்பு)

தமிழ் மக்கள் வாழும் பகுதிகளில் அமைந்துள்ள தபாலகங்களுக்கு தபால் திணைக்களத்தினால் வெளியிடப்படும் சுற்றறிக்கைகளை தமிழ் மொழியில் அனுப்புமாறு அகில இலங்கைத் தமிழ்பேசும் உப தபாலதிபர்கள் சங்கத்தினால் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

அனைத்து சுற்றறிக்கைகளும்சிங்கள மொழியில்அனுப்பப்படுவதால் தமிழ் பேசும் தபாலதிபர்கள் பெரும் சிக்கல்களை எதிர்நோக்குவதாக அவ் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. -3)உ

# புரிந்துணர்வு ஒப்பந்தம் மீறல் கண்டித்து நாளை பேரணி

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சிப் பிரதேசத்தில் இடம்பெறும் புரிந்துணர்வு உடன்பாட்டு மீறல்களைக் கண்டித்தும், உடன்பாட்டில் உள்ள விடயங்களை உடன் அமுல் படுத்துமாறு கோரியும் நாளை திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு பேரணி ஒன்று நடத்தப்படவுள்ளது.

தென்மராட்சி மக்கள் நலச் சேவைகள் சங்கம் மற்றும் பொது அமைப்புக்கள் இணைந்துஇதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றன.

இப் பேரணியானது சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இருந்து ஆரம்பித்து நகர வீதிகள் ஊடாகச் சென்று தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் முடிவடையும்.

முடிவில் மகஜர் ஒன்றும் கையளிக்கப்படவுள்ளது.

மேற்படி பேரணிக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு தென்மராட்சிப் பகுதி மக்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (உ)

## நம்பிக்கையில்லா பிரேரணை மீதான விவாதம் 4 தினங்கள் நடக்கும்

(கொழும்பு)

எதிர்க் கட்சியினரால் உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கவிற்கெதிராக பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதத்தை நான்கு நாட்கள் நடத்துவதற்கு கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

நாட்டின் சட்டமும் ஒழுங்கும் குலைந்து போனமைக்கு அமைச்சர் ஜோன் அமரதுங்க தான் பொறுப்பானவர் எனக் கூறி எதிர்க்கட்சி நம்பிக்கையில்லாப் பிரேரணையைத் தாக்கல் செய்துள்ளது.

ஆனாலும் விவாதத்திற்கான திகதிகள் இன்னமும் குறிக்கப்படவில்லை.

இது பற்றி அரசாங்க வட்டாரங்கள் தெரிவிக்கையில்; எதிர்க்கட்சியினர் இதனை விரைவில் விவாதிக்க வேண்டுமென்று பெரும் ஆர்வம் காட்டவில்லை எனக் கூறியுள்ளனர். (உ)


## சிறுவர் பற்றி சிந்திப்போம் !

சிறுவர்களது உரிமைகள் பற்றி நாம் சிந்திக்க எத்தனிக்கின்ற போது நாம் அவர்களது பொறுப்புக்கள் , குறித்துக் கவலைப்படுகின்றோம் அதே வேளை நாமே 'சிறுவர் துஷ்பிரயோகம் முதலான பொறுப்பற்ற நடவடிக்கைகளில் / செயல்களில் ஈடுபடுகின்றோம்/ இத்தகைய முரண்பாட்டுச் சிக்கல்களிலிருந்து விடுபடுவதனூடாக நாம் எமது நாளாந்தச் செயற்பாடுகளில் பிள்ளைகளினை மையமாகக்கொண்டு/ அவர்களது உயரிய நலன்களினை முதன்மையானதாகக் கொண்டு செயற்படுவோம்.

ஜெ. தற்பரன்

உங்கள் தொடர்புகளுக்கான எங்கள் முகவரி

மாவட்ட சிறுவர் பாதுகாப்பு குழு
அறை எண்-30
யாழ். போதனா வைத்தியசாலை
யாழ்ப்பாணம்.

சிறுவர் பாதுகாப்பு (ஐ.இ) அனுசரணையுடன் மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழுவினரின் வெளியீடு

(சி-4657)

# வாழ்த்துகிறோம்

**கட்டைவேலி நெல்லியடி ப.நோ.கூ. சங்கம்**
**நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடாத்தும்**

**80 வது அனைத்துலகக் கூட்டுறவுத் தின நிகழ்வுகள் வெற்றிபெற எமது வாழ்த்துக்கள்**

233, மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணம்

சரவணா அச்சக உரிமையாளரும், ஊழியர்களும்

[C/4662]


## விவசாய பிரதி அமைச்சரின் வருகை பிற்போடப்படுள்ளது

(யாழ்ப்பாணம்)

நான்கு நாள் உத்தியோக பூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு நாளை திங்கட்கிழமை யாழ்ப்பாணம் வரவிருந்த விவசாயம், கால் நடை பிரதி அமைச்சர் முத்து சிவலிங்கத்தின் வருகை பிற்போடப்பட்டுள்ளதாக யாழ் அரச அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

(02ம் பக்கம் பார்க்க)

## புலிகளின் கட்டுப்பாட்டு ...

சென்றனர்.

இவர்களை தமது கட்டுப்பாட்டுப் பகுதிக்கு விடுதலைப்புலிகளின் பிராந்திய அரசியல் பிரமுகர் விசு அழைத்துச் சென்றார். படையினரும் விடுதலைப்புலி உறுப்பினர்களும் சேர்ந்து வருவதை அப்பகுதி மக்கள் மிகவும் ஆச்சரியத்துடன் பார்த்தனர்.

233வது கட்டளை அதிகாரி கேணல் வி.ஆர்.எல். அன்ரனியும், புலிகளின் பிரமுகர் விசுவும் ஒருவாகனத்தில் ஒன்றாக அமர்ந்து சென்றனர். (இ)

## தேர் உற்சவம்

கோப்பாய் தெற்கு தனிப்பனை வீரபத்திரர் சுவாமி தேவஸ்தானத்தின் வருடாந்த தேர் உற்சவம் இன்று காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது. (இ)


# இடம்மாற்றம்

அனைத்து கொம்பியூட்டர் ஓவ் (f) செற் பிறிண்டிங் வேலைகளுக்கும

**கங்கை**
**ஓவ்(f)செற் பிறிண்டேர்ஸ**

184A, நாவலர் வீதி,
பெருமாள் கோவிலடி,
யாழ்ப்பாணம்.



# மக்கள் வங்கி

PEOPLE'S BANK

## கேள்விப் பத்திர அறிவித்தல்

### பாவித்த மோட்டார் வாகனமும் மின் பிறப்பாக்கிகளும் விற்பனை

**பின்வரும் வாகனத்தையும் மின் பிறப்பாக்கிகளையும் விற்பதற்கான விலைக் கோரிக்கைகள் கோரப்படுகின்றன**

*17 - 6027 இலக்கமுடைய மஸ்டா கார்*
*மூன்று மின் பிறப்பாக்கிகள்*

வடவலய உதவிப் பொது முகாமையாளர், மக்கள் வங்கி 79, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாண அலுவலகத்தில் பெறப்பட்ட படிவங்களில் விலைக் கோரிக்கை மனுக்கள் சமர்பிக்கப்படல் வேண்டும். விலை மனுக் கோரிக்கை தொடர்பான அறிவுறுத்தல்களும் நிபந்தனைகளும் கேள்வி மனுக்களுடன் வழங்கப்படும்.

திருப்பிப் பெறாத கட்டணமாக ரூபா 250/- செலுத்தி 2002.08.14 திகதி பிப 2.00 மணிவரை கேள்வி மனுவுக்கான பத்திரங்களை மக்கள் வங்கி, வட வலய உதவிப் பொது முகாமையாளர் அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம். ஒவ்வொரு வாகனத்திற்கும் தனித்தனியே திருப்பி பெறக்கூடிய கட்டணம் ரூபா 10,000/-ம் ஒவ்வொரு மின் பிறப்பாக்கிகளுக்கும் 10,000/-ம் விண்ணப்பம் சமர்ப்பிக்கும் போது செலுத்தப் படல் வேண்டும்.

உதவிப் பொது முகாமையாளர்
வட வலயம்

மக்கள் வங்கி
79, கன்னாதிட்டி வீதி
யாழ்ப்பாணம்

தொலைபேசி : 021 – 2601, 021 – 2602, 021 – 2956
தொலைநகல் : 021 – 2602, 021 – 2956



# மின் பாவனையாளர்களே!

**NIPPON** எனஜி பல்பை பயன்படுத்தி உங்கள் மின்சார கட்டணத்தை 5 மடங்காகக் குறையுங்கள்



| விலை | எனஜி பல்ப் | சாதாரண பல்ப் |
|---|---|---|
| 295/- | 11w | 55w |
| 340/- | 13w | 65w |
| 340/- | 15w | 75w |
| 450/- | 18w | 90w |
| 470/- | 20w | 100w |
| 490/- | 22w | 110w |
| 500/- | 26w | 130w |



மேற்குறிப்பிட்ட எனஜி பல்புகள் 1 வருட உத்தரவாதத்துடன் எமது நிறுவனத்தினால் விற்பனை செய்யப்படுகின்றது.

5 பல்பிற்கு மேல் கொள்வனவு செய்பவர்களிற்கு 10 %கழிவு (15.08.2002 வரை) வழங்கப்படும்.

விபரங்களுக்கு:

**JAFFNA TECHNICAL INSTITUTE**
11/10B, ஸ்ரான்லி வீதி, (முட்டாஸ்கடைச் சந்தியருகில்)
யாழ்ப்பாணம். T.P.No: 3335

**குறிப்பு:** – சகல இன எனஜி பல்புகளும் 10 நிமிடத்தில் திருத்திக் கொடுக்கப்படும்.



# ACX COURIER SERVICE

## உள்நாட்டு வெளிநாட்டு துரித தபால், பொதி விநியோக சேவை

உங்கள் தபால்கள், பொதிகள் ஆகியன இலங்கையின் எப்பாகத்துக்கும், உலகின் எப் பாகத்துக்கும் மிகக் குறுகிய காலத்தில் அனுப்பவேண்டுமெனின் எங்களைத் தொடர்புகொள்ளலாம்.

**எங்கள் சேவைகளானது:**

a. உள்நாடு
1. யாழ்ப்பாணம் - யாழ்ப்பாணம் - ஒரு குறிப்பிட்ட மணி நேரத்திலும்
2. யாழ்ப்பாணம் - கொழும்பு - 24 மணி நேரத்திலும்.
3. யாழ்ப்பாணம் - கொழும்பு தவிர்ந்த ஏனைய மாவட்டங்கள் - 36 மணி நேரத்திலும்

b. வெளிநாடு
1. இந்தியா, மலேசியா, தாய்வான், சிங்கப்பூர், மாலைதீவு - இரு தினங்களிலும்
2. பிரான்ஸ், டுபாய், சவூதி அரேபியா, ஜேர்மனி, இத்தாலி, கனடா, நியூஸிலாந்து, நோர்வே, கட்டார், சுவிற்சர்லாந்து, லண்டன், ஆஸ்திரேலியா, சுவீடன், பெல்ஜியம், அமெரிக்கா, டென்மார்க். } 3,4 தினங்களிலும்

**உங்கள் பொருட்கள் விநியோகிக்கப்படும்.**

கப்பல் மூலமாக வெளிநாடுகளுக்கு தொகையாக பொருட்கள் அனுப்ப விரும்புவோரும் எம்மைத் தொடர்பு கொள்ளலாம்.



இறையியல் மகாநாட்டின் இறுதி வழிபாடும்,
வண. அறிவர் D.T. நைல்ஸ் அவர்களின்

# வாழ்க்கைக்கும் இறைபணிக்குமான நன்றிசெலுத்தும் வழிபாடும

காலம் : 17.07.2002 புதன்கிழமை பி.ப 4.30 மணி
இடம் : கிறிஸ்தவ சேவா ஆச்சிரமம், மருதனார்மடம்
அருளுரை : அதி. வண. டூலிப் டீ சிக்கேரா, (ஆயர், கொழும்பு மறைமாவட்டம், இலங்கைத் திருச்சபை)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

வண. ஏ.ஏ.போல்
தலைவர்

வண. என்.ஜே.ஞானப்பொன்ராஜா
காரியதரிசி

கப்பல் மூலமாக வெளிநாடுகளுக்கு தொகையாக பொருட்கள் அனுப்ப விரும்புவோரும்
எம்மைத் தொடர்பு கொள்ளலாம்.

[C/4659]

ACX

இல. 8, நவீன சந்தை, யாழ்ப்பாணம், முதலாம் மாடி, மக்கள் வங்கி காங்கேசன்துறைக் கிளை அருகில்
T.P. 021 - 2405, FAX 021 - 2171

தலைவர் காரியதரிசி

யாழ் கிறிஸ்தவ ஒன்றியம்

குறிப்பு : சபைகளில் அறிவித்து சபை மக்கள் பங்குபற்ற வாகன வசதி ஏற்படுத்தித் ஊக்குவிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

[5680]

யாழ் நகரில் HERO HONDA உந்துார்திகளுக்கு
அங்கீகாரம் பெற்ற ஏக முகவர்
இரத்தினகோபால்ஸ்
ஆர். ஜி. பில்டிங்
65, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
நீங்கள் என்றும் கண்டிராத
ஆச்சரியப்படும் விலையில் உ வருட உத்தரவாதத்துடன்

விற்பனைக்குப் பிந்திய சேவை

RG

- மெர்வில் சேக்ரர்
- சீ.டி 100 டிலக்ஸ்
- சீ.டி 100 ஸ்சிற் சீமாட்
- சீ.டி 100 ஸ்பிளைன்டர்
- சீ.டி 100 SS
- கீறோ கொண்டா பஷன்
- சீ.ஜீ 125 (P.K.S)
- சி.பி.சற் 150 CC




இரத்தினகோபால்ஸ்
ஆர்.ஜி.பில்டிங்
65, கன்னாதிட்டி வீதி.
யாழ்ப்பாணம்.

உங்கள் தெரிவுகளுக்கு நாடுங்கள்
"கீறோ கொண்டா"
ஓர் மதிநுட்பத் தேர்வு

[C 4661]

இப்பத்திரிகை வலம்புரி அச்சு ஸ்தாபனத்தினரால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.07.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.